
இன்பத்தை அள்ளித்தரும்
இந்துமதம்
5
தமிழறிஞர்
கே. வி. குணசேகரம்

# இன்பத்தை அள்ளித்தரும்
# இந்து மதம்

பாகம் - 05

தமிழறிஞர்
கே. வி. குணசேகரம்

# என்னுரை

அன்பார்ந்த வாசகர்களே! இது நாள் வரையும் ஆத்திசூடி, திருக்குறள், பகவத்கீதை, வேதங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள், திருமந்திரம் போன்ற இந்து மத நூல்களுக்குக் கதை எழுதினேன். இப்பொழுது மேற்கண்ட நூல் கூறும் வாழ்க்கைத் தத்துவங்களைக் கட்டுரைகள் மூலம் எழுதி வருகிறேன். இன்பமாக ஒருவன் வாழ எவையெவை அவசியமோ அவற்றையெல்லாம் இலகு தமிழில் எழுதி; ''இன்பத்தை அள்ளித்தரும் இந்து மதம்'' என்ற பெயரில் வெளியிடுகிறேன். இத்தொடர் பத்து நூல்களாக வெளிவரும். இந்நூலில் வேதங்களும், உபநிடதங்களும், இந்து சமய தத்துவ நூல்களும் திருக்குறளைப் பற்றிக் கூறியவற்றைத் தெகுத்துத் தருகிறேன். இந்நூலை அழகுறக் கணணி மயப்படுத்தித் தந்த செல்வி க. தேனமிர்தம் அவர்கட்கும், பிரதியை ஒப்புநோக்கிப் பிழைகளைத் திருத்தித் தந்த செல்வி ப. இறைமகள் ஆசிரியைக்கும், இந்நூலை வெளியிடும் லங்கா பதிப்பகத்தினருக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

அன்புடன்,

கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
நல்லூர்,
இந்துமகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

கே. வி. குணசேகரம்.
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

வாழ்க்கையின் சகல துறைகளையும் சிறப்பாக விளக்கி மக்களின் இன்ப வாழ்விற்கு வழிவகுக்கும் இந்து தத்துவத் தேனான திருக்குறளை அறிஞர்கள் சமண நூல் என்றும், பௌத்த நூல் என்றும் கூறுகிறார்கள். இதன் உண்மை நிலையை விளக்குங்கள்.

திருக்குறள் எந்தச் சமயத்திற்குரிய நூல் என்பதில் இன்னும் பல அறிஞர்களுக்கிடையே சர்ச்சைகள் உண்டு. அதை முழுமையாகத் தீர்க்க வேண்டும் என்றும் நோக்குடன் வைதீக அவைதீக சமயத் தத்துவங்கள் அனைத்தையும் அணு அணுவாகப் பிரித்துப் படித்தேன். இவற்றை விடப்பல அறிஞர்களது நூல்களையும் கட்டுரைகளையும் படித்த பின் ஒரு முடிவுக்கு வந்தேன். வேதங்களின் பிழிசாறு தான் உபநிடதங்கள். அதுபோல வேதஉபநிடதங்கள், பகவத் கீதை, வைதீக சமயங்களின் பிழிசாறுதான் திருக்குறள். அது வைதீக சமைய நூல். வேதங்களில் கூறப்பட்ட கிரிகைகள், யாகங்களைப் பற்றிச் சிறப்பாகத் திருக்குறள் சொல்லவில்லை. திருக்குறள்எழுந்த காலத்தில் அப்போது வாழ்ந்த சமூகத்தில் பெரும் கலாச்சாரச் சீரழிவு காணப்பட்டது. அதை நாம் பழந்தமிழ் இலக்கியங்கள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது. அத்துடன் வேதத்தில் உள்ள கிரியாபாகத்தை ஏற்காத வைதீக மதங்களும் உண்டு. அதே போல வேதத்தில் உள்ள கிரியாபாகத்தைப் பற்றிச் சிறப்பாகத் திருக்குறள் சொல்லவில்லை. இதற்குக்காரணம் மக்கள் கிரியைகளைச் செய்து கொண்டு ஒழுக்கமில்லா தவர்களாக வாழ்ந்தமைதான்.

அந்த நேரம் மக்களுக்கு ஒழுக்கம் தேவைப்பட்டது. அத்துடன் வேத உபநிடதங்களை மக்கள் நன்கறிந்திருந்தனர். கோயில்களிலும், மடங்களிலும், ஆசிரியர்களது வீடுகளிலும் கல்வியூட்டும் நடவடிக்கைகள் இடம்பெற்றக் கொண்டிருந்தன. உதாரணத்திற்காக நாம் இன்றைய சமூக நிலையைப் பார்த்தால் சமயத்தைப் பரப்புவதற்காகப் பல ஆதீனங்களும் நிறுவனங்களும் உள்ளன. கோயில் களில் இலட்சக்கணக்கில் மக்கள் திரள்கிறார்கள். அவர் களுக்குப் போதிய சமயஅறிவு உள்ளது. ஆனால் போதியளவு ஒழுக்கமில்லை. கொலை, களவு, கற்பழிப்பு என்பன நடைபெறுகின்றன. தற்போதய சூழ்நிலையைப் போன்றதொரு சூழ்நிலைதான் திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில் இருந்திருக்கிறது. அதனால் தான் அவர் மக்கள் ஏற்கனவே நன்கு அறிந்திருந்த கிரிகாபாதத்தை விட்டுவிட்டு ஒழுக்கத்தை மட்டும் சொன்னார்.

வேதத்தில் உள்ள தத்துவத்தை உபநிடதங்கள் சொல்கின்றன. அதே போல வேதத்தில் உள்ள கட்டிடக் கலையை ஆகமங்கள் சொல்கின்றன. புராணங்களும் இதிகாசங்களும் வேத உபநிடதக் கருத்துக்களைக் கதையாகக் கூறுகின்றன. வேதத்தில் ஒழுக்கத்திற்குகென வருனன் என ஒரு கடவுள் உண்டு. அத்துடன் ஒழுக்கக் கடவுளுக்கு வேதம் பெரும் முக்கியத்துவம் கொடுக்கிறது. அத்துடன் மனிதன், இயற்கையைத் தெய்வமாகக் கருதி அவற்றை வழிபட்டு வந்தமை பற்றி வேதம் கூறுகிறது.

வேதங்கள் மனிதனது கடமைகளை ஐந்தாக வகுத்துள்ளன. தெய்வம், ஞானிகள், பிதிரர், உடன் வாழ்வோர், பிராணிகள் முதலியவற்றிற்குத் தன்னாலான உதவிகளை

மனிதன் செய்ய வேண்டும் என்கிறது. இதைத் திருக்குறளும் சொல்கிறது

43. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான்என்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை.

தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தவர் என்பவர்களுடன் தன்னையும் போற்றுதல் இல்வாழ்வானது தலையாய கடனாகும்.

சதபதப் பிராமணம்: “தனக்குரிய எல்லாவற்றையும் துறந்தால் வீடுபேறு கிடைக்கும்” என்கிறது. அத்துடன் வேதம், சுயநலமின்மை, தியாகம், விருந்தோம்பல் என்பன அறமென்றும், பொய்பேசுதல், பிறன் மனை விழைதல், சூதாடல் பாவம் என்கிறது. இவற்றையும் குறள் சொல்கிறது.

72. அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

அன்பில்லாதவர்கள் எல்லாப் பொருட்களையும், தம்பொருள் என உரிமை கொண்டாடுவர். அன்புள்ளவர்கள் தமது உடலால் பிறருக்கு சேவை செய்து வாழ்வர். (உடலுறுப்புக்களையும் தானமாக வழங்குவர்.

80. அன்பின் வழியது உயிர்நிலை அஃதுஇலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.

அன்பு வழியில் இயங்கும் உடம்பே உயிர் உள்ள உடம்பாகும். அன்பு இல்லாத உடம்பு எலும்புகளைத் தோல் போர்த்த வெற்றுடம்பு ஆகும்.

81. இருந்துஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்ஓம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

பொருள்களைத் தேடிக்காத்து இல்வாழ்க்கை நடத்துவதெல்லாம் விருந்தினரைப் பேணி உதவி செய்யும் பொருட்டே ஆகும்.

148. பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு.

பிறனுடைய மனைவியை இச்சையுடன் நோக்காத ஆண்மை ஆன்றோர்க்கு அறம் மட்டும் அன்று; நிறைந்த ஒழுக்கமும் ஆகும்.

293. தன்நெஞ்சு அறிவது பொய்யற்க; பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்.

ஒருவன் தன்நெஞ்சம் அறிந்ததைக் குறித்துப் பொய் சொல்லல் ஆகாது. அவ்வாறு சொன்னால் அவனது நெஞ்சே அவனை வருத்தும்.

936. அகடுஆரார் அல்லல் உழப்பர் சூதுஎன்னும்
முகடியால் மூடப்பட் டார்.

சூது என்று சொல்லப்படுகின்ற மூதேவியால் விழுங்கப்பட்டவர், வயிறு நிறைய உண்ண முடியாதவராகிப் பல துன்பங்களுக்குட்பட்டு வருந்துவர்.

முத்தியடைவதற்குரிய வழியை உபநிடதங்கள் மிகவும் விரிவாகக் கூறுகின்றன. முத்திக்கு வைராக்கியமும், ஞானமும் முக்கியமானவை. வைராக்கியம் என்பது சகல பற்றுக்களையும் அறுத்துக் கொள்ளல். பற்றுக்களை அறுக்க வேண்டுமானால் அகங்காரத்தை நீக்குதல் வேண்டும். அகங்காரம் தான் சகல கேட்டுக்கும் வித்தாகும். பிரமச்சாரியம், கிரகஸ்தம், வானப் பிரஸ்தம் முதலிய வாழ்க்கைப்படிகளை முறையாகக் கடைப்பிடிப்பதன் மூலமே அகங்காரத்தை நீக்கலாம். இது உபநிடத வாக்கு. இதையே திருக்குறளும் சொல்கிறது.

24. உரன்என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரன்எனும் வைப்பிற்குஓர் வித்து.

மனவலிமையால் ஐம்பொறிகளாகிய யானைகளை அடக்குபவனே முத்திக்கு விதை போன்றவன்.

உபநிடதத்தில் கிரிகாபாதத்தைப் பற்றிப் பெரிதாகக் கூறப்படவில்லை. அதேபோலத் தான் திருக்குறளும் கிரியாபாதத்தைப் பற்றிப் பெரிதாகக் கூறவில்லை. அத்துடன் ஒழுக்கக் கோட்பாடுகளைப் பற்றி மிகவும் விரிவாகத் திருக்குறள் கூறுகிறது. மனிதனின் ஒவ்வொரு பிரிவினரும் எப்படி ஒழுக்கமாக வாழவேண்டும் என்பதை வேத உபநிடதங்களிலும் பார்க்க விரிவாகவும், விளக்கமாகவும் திருக்குறள் கூறுகிறது.

உபநிடதங்கள் தத்துவப் போதனை மட்டும் செய்யாது பொருளாதாரம், சமூக ஒழுக்கம் என்பவற்றையும் கூறுகின்றன. செல்வத்தைப் புறக்கணிக்கக்கூடாது; விருந்தினரைத் தெய்வமாகக் கருதி வரவேற்று உபசரி, உனக்காக மட்டும் உணவை உண்டாக்காது நாட்டிற்காகவும் உணவை உற்பத்தி செய்; நீ உழைப்பது உனக்காக மட்டுமல்ல, மற்றவர்களுக்கு உதவுவதற்காகவும் பொருளைத் தேடு. இது இல்வாழ்வானுக்குரிய ஒழுக்கம் என்கிறது. அத்துடன் விருந்தோம்பலை உபநிடதங்கள் சிறப்பித்துக் கூறுகின்றன. அதற்கு உதாரணமாக கடோப நிடதத்தில் யமன் தன்னிடம் விருந்தினனாக வந்த நசிகேசனை மூன்று நாட்கள் காக்க வைத்தமைக்காக மன்னிப்புக் கோரி மூன்று வரங்களைக் கொடுக்கிறான். இது உபநிடதம் விருந்தோம்பலைச் சிறப்பித்துக் கூறும் இடமாகும். இதே விருந்தோம்பலை உபநிடதம் கூறியவாறு வள்ளுவர் கூறுகிறார்.

81. இருந்துஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்ஓம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

பொருள்களைத் தேடிக்காத்து இல்வாழ்க்கை நடத்துவதெல்லாம் விருந்தினரைப் பேணி உதவி செய்யும் பொருட்டே ஆகும்.

84. அகன்அமர்ந்து செய்யாள் உறையும் முகன்அமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்.

முகமலர்வோடு விருந்தினரை வரவேற்று உபசரிக்கின்ற வனது வீட்டில் மனமகிழ்வோடு திருமகள் வாழ்வாள்.

திருமகளை அவைதீக சமயங்கள் ஏற்பதில்லை

86. செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்துஇருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.

தன்னிடம் வந்த விருந்தினரைப் போற்றி உபசரித்து, இனிவரும் விருந்தினரைப் போற்றி உபசரிக்கக் காத்திருப்பவன் வானுலகத்தில் உள்ள தேவர்களுக்கு நல்ல விருந்தினனாவான்.

உபநிடதங்களில் சிறப்பித்துக் கூறப்பட்ட விருந்தோம் பலைப் பற்றி மற்றய இலக்கியங்கள் எதுவும் திருக்குறளைப் போலச் சிறப்பாகக் கூறவில்லை. அத்துடன் திருமகள் வைதீக சமயத்தினர் வழிபடும் மிகவும் சக்தியுள்ள பெண் தெய்வம். இத்தெய்வம் மகிழ்வுடன் வீட்டில் வாழும் வழியைச் சொன்னவர் எப்படி அவைதீக சமயத்தைச் சேர்ந்தவராவர். அத்துடன் தேவர்களின் விருந்தினன் என்ற பதம் மக்களை விருந்தோம்பல் மூலம் தேவர்களாக்குகிறது. தேவர்களை உயர்வாக அவைதீக சமயத்தவர் எவரும் கூறியதில்லை. அத்துடன் கடவுளே இல்லை என்னும் சமயங்கள் தேவர்களைக் எப்படி ஏற்றுக் கொள்ளும். வைதீக சமயத்தவர்கள் தேவர்களைக் கடவுளாக நினைப்பவர்கள்.

உபநிடதங்கள் முத்தியடைய ஞானமும் ஒருவழி என்கிறது. அதன்படி ஞானத்தை அடைய மூன்று வழிகளை உபநிடதம் கூறுகிறது. அவை கிரவணம், மனனம், நித்தியாசனம், என்பனவாகும். கிரவணம் என்பது தக்க குருவின் மூலம் கற்றல். மனனம் என்பது கற்றவற்றைச் சிந்தித்து நடத்தல். நித்தியாசனம் என்பது அவற்றைத் தியானித்தல். இதை வள்ளுவர் தனது குறளில் பல இடங்களில் கூறியுள்ளார்.

அறம் உணர்ந்தவர்களாய்த் தன்னை விட வயதில் மூத்தவராய் உள்ள அறிவுடையவரின் நட்பை ஆராய்ந்து பெறல் வேண்டும்.

தம்மை விட அறிவில் சிறந்த பெரியவர்களைத் தமக்குச் சுற்றத்தவராக ஆக்கி அவரைப் பின்பற்றி நடத்தல், வல்லமை எல்லாவற்றிலும் சிறந்த வல்லமையாகும்.

கண்டித்து அறிவுரை கூறவல்ல பெரியாரின் துணையில்லாத காவலற்ற அரசன், தன்னைக் கெடுக்கும் பகைவர்கள் எவரும் இல்லா விட்டாலும் கெடுவான்.

மனநலம் மிக்க உறுதி வாய்ந்த சான்றோராக இருந்தாலும், அவர்களுக்கு இனத்தின் நன்மை மேலும் நல்ல காவலாக அமையும்.

மனத்தின் நன்மையால் மறு பிறவியிலும் இன்பம் உண்டாகும்; அதுவும் இனத்தின் நன்மையால் மேலும் கூடுதலான சிறப்பைப் பெறும்.

அறத்தை அறிந்தவனாகவும், அறிவு நிறைந்த சொற்களைக் கூறுபவனாகவும், எக் காலத்திலும் செயல் செய்யும் திறன் அறிந்தவனாகவும் விளங்குபவனே அரசனுக்குச் சிறந்த துணையாவான்.

நுட்பமான அறிவோடு நூலறிவும் உடையவர்களுக்கு, மிக நுட்பமான சூழ்சிகள் என்று எவையும் இல்லை.

சிறந்த நூல்களைக் கற்று, அதன் பொருளை நன்கு அறிந்து, பிறருக்கு அதைக் கற்பித்துக் கொண்டிருப்பவன், அந்த உயர்ந்த கருத்துக்களைத் தன் வாழ்வில் கடைப் பிடிக்க வில்லையென்றால் அவனை விடப்பேதமை உள்ளவன் உலகில் எவனும் இல்லை என்று கூறுகிறது.

அடுத்துக் கீதையைப் பற்றி ஆராய்ந்தால் கீதையில் அர்ச்சுனனுக்குக் கூறப்பட்ட உபதேசங்கள் பல திருக்குறளில் கூறப்பட்டுள்ளன. கண்ணன் போர்க்களத்தில் அரிச்சுணனுக்குக் கூறிய உபதேசங்கள் பின்வரும் குறள்களில் அடங்குகின்றன. அரசனைத் தெய்வம் என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

நீதி நெறி முறைகள் தவறாமல் ஆட்சி செய்யும் அரசனை, மக்கள் இறைவனின் இடத்தில் வைத்துப் போற்றுவார்கள்

கொடை, கருணை, நீதி தவறாமை, குடிகளைக் காத்தல் ஆகிய நான்கு தன்மைகளையும் உடைய அரசன், அரசர்க் கெல்லாம் விளக்குப் போன்றவன்.

செய்யும் செயலின் வலிமையையும், தனது வலிமையையும், பகைவனுடைய வலிமையையும், இருவருக்கும் துணையாக இருப்பவர்களின் வலிமையையும் ஆராய்ந்து செயற்படல் வேண்டும்.

செயலை முடிப்பதற்கு ஏற்ற காலத்தையும் இடத்தையும் அறிந்து செயற்பட்டால், உலகமே வேண்டுமென நினைத் தாலும் அதுவும் கைகூடும்.

கிடைத்தற்கரிய காலம் வந்து வாய்க்குமானால், அந்த வாய்பை நல்ல முறையில் பயன்படுத்திச் செய்வதற்கரிய செயல்களைச் செய்தல் வேண்டும்.

யாராக இருந்தாலும் அவர்கள் செய்த குற்றத்தை ஆராய்ந்து இரக்கம் காட்டாமல், நடுவுநிலைமை தவறாமல் தக்க தண்டனை அளிப்பதே சிறந்த நீதி நெறியாகும்.

உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் மழையை நம்பி வாழ்கின்றன. அதே போல, குடிமக்கள் எல்லோரும் அரசனது செங்கோலை நம்பி வாழ்கின்றனர்.

அந்தணர் ஓதும் வேதத்திற்கும், அறத்திற்கும் மூலமாக நின்று உலகத்தைக் காப்பது மன்னனுடைய செங்கோலாகும்.

ஒருவனுக்கு வெற்றி பெற்றுத் தருவது வேல் அல்ல, மன்னனது நீதி தவறாத ஆட்சி முறையே ஆகும்.

குடிகளுக்குப் பிறராலும் தன்னாலும் துன்பம் வராமல் காத்து, அவர்கள் செய்யும் குற்றங்களுக்குத் தகுந்த தண்டனை கொடுதல் ஆள்பவனுக்குப் பழியாகாது; அது அவனது கடமையாகும்.

அரசன், கொடிய செயல்களைச் செய்தவர்களுக்கு மரணதண்டனை வழங்குவது, பயிரைக் காப்பாற்ற உழவர்கள் களைகளைக் களைவதற்கு ஒப்பான செயலாகும்.

கீதை கூறும் நான்கு விஷயங்கள் 1) துக்கம் 2) துக்க நிவாரணம் 3) துக்க உற்பத்தி 4) துக்க நிவாரண மார்க்கம். துக்கத்திற்குக் காரணம் பற்று. இதற்கு வள்ளுவன் திருக்குறளில் அருமையான விளக்கமளிக்கிறான்.

341. யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.

ஒருவன் எந்தெநந்தப் பொருட்களிலிருந்து பற்றை நீக்கிக் கொள்கிறானோ அவனுக்கு அந்தந்தப் பொருள்களால் துன்பம் உண்டாவதில்லை.

342. வேண்டின்உண் டாகத் துறக்க; துறந்தபின்
ஈண்டுஇயற் பால பல.

துன்பமில்லாத நிலைவேண்டுமென்றால், பொருட்கள் மீதுள்ள ஆசைகளை நீக்க வேண்டும். நீக்கினால் பல்வேறு இன்பங்களைப் பெறலாம்.

343. அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை; விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு.

ஐம்பொறிகளுக்குரிய ஐந்து புலன்களின் ஆசையை வெல்லுதல் வேண்டும். அவற்றிற்கு வேண்டிய பொருட்களை யெல்லாம் ஒருசேர விடல் வேண்டும்.

345. மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்புஅறுக்கல்
உற்றார்க்கு உடம்பும் மிகை?.

பிறவித் துன்பத்தைப் போக்க முயல்கின்றவனுக்கு உடம்பும் மிகையான பொருள்.

346. யான்எனது என்னும் செருக்குஅறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்.

உடம்பை யான் எனக் கருதலும் தொடர்பு இல்லாத பொருளை எனது எனக் கருதலுமாகிய மயக்கத்தைப் போக்குகின்றவன் தேவர்களும் எட்டாத உயர்ந்த நிலையை அடைவான்.

347. பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு.

யான் எனது என்றும் இருவகைப் பற்றுக்களையும் பற்றிக் கொண்டு விடாதாரை, துன்பங்கள் விடாமல் பற்றிக் கொள்ளும்.

348. தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்.

முற்றும் துறந்தவரே உயர்ந்த நிலையினன் ஆவர். அவ்வாறு துறக்காத மற்றவர், அறியாமையாகிய வலையில் அகப்பட்டவராவர்.

349. பற்றற்ற கண்ணே பிறப்புஅறுக்கும்; மற்று
நிலையாமை காணப் படும்.

இருவகைப் பற்றும் அற்ற பொழுதே அந்நிலை பிறவித் துன்பத்தை ஒழிக்கும். இல்லையானால் நிலையாமை காணப்படும்.

350. பற்றுக பற்றற்றான் பற்றினை; அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

பற்றில்லாதவனாகிய கடவுளுடைய பற்றை மட்டும் பற்றிக் கொள்ளல் வேண்டும்; உள்ள பற்றுக்களை விட்டொழிப்பதற்கே அப்பற்றைப் பற்ற வேண்டும்.

மேற்கூறப்பட்ட குறள்கள் கீதை கூறும் நான்கு விஷயங்களைப் பற்றியும் அருமையாகக் கூறுகின்றன. இந்த இடத்தில் நான் ஒன்றைக் கூற விரும்பகிறேன். பாரத தேசத்தில் பிராமணர்களின் ஆதிக்கம் எல்லாக் காலத்திலும் மேலோங்கியிருந்தது. கிரிகா பாதத்திற்கு வள்ளுவன் முக்கியத்துவம் கொடுக்காமையால் பிராமணர்கள் வேண்டு மென்றே திருக்குறளின் பெருமையை மூடி மறைத்தனர். அரசர்களுக்குத் தவறான கருத்துக்களைக் கூறினர். அந்த வகையில் தான் திருக்குறள் சமண நூலெனச் சிலரும் பௌத்த

நூலெனச் சிலரும் கூறி அதை விலக்கி வைக்க முற்பட்டனர். உபநிடதங்களும் பகவக் கீதையும் பெரிதாகக் கிரிகைகள் பற்றிச் சொல்லாத போதும் அவை போற்றப்படுகின்றன. அதற்குக் காரணம் பிராமணரது ஒழுக்கத்தைப் பற்றி அவை கூறவில்லை.

134. மறப்பினும் ஒத்துக் கொளலாகும்; பார்ப்பான்
 பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்.

பார்ப்பான் தான் கற்ற மறைப்பொருளை மறந்தாலும் மீண்டும் அதனை ஓதிக் கற்றுக் கொள்ள முடியும்; ஆனால் மறை ஓதுபவனின் குடிப்பிறப்பு, ஒழுக்கங்குன்றினால் கெடும்.

என்று குறள் கூறுகிறது.

அத்துடன் வைதீக சமயத்தினர் தேவர்களை உயர்வாகப் போற்றுவர். ஆனால் தேவர்கள் தேவமகளிர் பலருடன் உறவாடுவதும், சோமபானம் அருந்துவதும், மனம் போன போன போக்கில் நடப்பதும் வள்ளுவனுக்குப் பிடிக்கவில்லை. அதனால் தேவர்களையும் அவன் கண்டித்தான்.

1073. தேவர் அனையர் கயவர் அவரும்தாம்
 மேவன செய்தொழுக லான்.

கயவர்களும் தேவர்களைப் போலத் தாம் விரும்புகின்றவற்றைச் செய்து மனம் போன போக்கில் நடத்தலால் கயவரும் தேவரைப் போன்றவர்.

இப்படித் திருக்குறளில் வள்ளுவர் சகல இன மக்களுக்கும் ஒழுக்கம் அவசியமென்று கூறுவதாலும், ஒழுக்கம் தவறிய அரசர்களையும் கண்டிப்பதாலும் வேண்டுமென்றே ஒழுக்கம் தவறிய பிராமணர்களும், அரசர்களும், அறிஞர்களும் வைதீகச் சமயத்தேனாகிய திருக்குறளுக்கு சமண, பெத்தச் சாயம் பூசினர்.

துறவு என்ற அத்தியாயம் பகவத் கீதை கூறும் துக்கம், துக்கநிவாரணம், துக்க உற்பத்திப ற்றிக் கூறுகிறது. 350ஆவது குறள் துக்க நிவாரண மார்க்கத்தைக் கூறுகிறது. அத்துடன் கடவுள் வாழ்த்தில் உள்ள சிலகுறள்களும் துக்க நிவாரணம் பற்றிக் கூறுகின்றன.

350. பற்றுக பற்றற்றான் பற்றினை; அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

பற்றில்லாதவனாகிய இறைவனின் மீது மட்டும் பற்றுக் கொள்ளல் வேண்டும், உள்ள பற்றுக்களை விட்டொழிப்பதற்கு அப்பற்றைப் பற்றுதல் வேண்டும்.

4. வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

விருப்பு வெறுப்பு இல்லாத கடவுளின் திருவடிகளைப் பொருந்தி நினைக்கிறவர்களுக்கு எப்பொழுதும் எவ்விடத்திலும் துன்பம் இல்லை.

5. இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

கடவுளின் உண்மையான புகழை விரும்பி அன்பு செலுத்துகின்றவரிடம், அறியாமையால் விளையும் இருவகை வினைகளும் சேர்வதில்லை.

6. பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

ஐம் பொறிகள் வாயிலாகப் பிறக்கும் வேட்கைகளை அவித்த இறைவனுடைய பொய்யற்ற ஒழுக்க நெறியில் நின்றவர், நிலைபெற்ற நல்வாழ்க்கை பெறுவர்.

7. தனக்குஉவமை இல்லாதான்தாள் சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

தனக்கு ஒப்புவமை இல்லாத இறைவனுடைய திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்ற வர்களுக்கு அல்லாமல், மற்றவர்களுக்கு மனக்கவலையை மாற்ற முடியாது.

8. அறஆழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
பிறஆழி நீந்தல் அரிது.

அறக்கடலாக விளங்கும் கடவுளின் திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்களுக்கு அல்லாமல், மற்றவர் பொருளும் இன்பமுமாகிய மற்றக் கடல்களைக் கடக்க முடியாது.

10. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

இறைவனுடைய திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர் பிறவியாகி பெரிய கடலைக் கடக்க முடியும்; மற்றவர் கடக்க முடியாது.

36. அன்றுஅறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றுஅது
பொன்றும்கால் பொன்றாத் துணை.

பின்பு செய்வோம் என்று நினைக்காது அன்றே அறத்தைச் செய்தல் வேண்டும். ஒருவன் இறந்த பின்பு அவனுடன் துணையாகக் கூடச்செல்வது அறம் ஒன்றுதான்.

37. அறத்தாறு இதுஎன வேண்டா; சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை.

பல்லக்கைச் சுமப்பவனையும், அதில் பயணம் செய்பவனையும் கண்டு இதுதான் அறத்தின் பயன்னென எண்ண வேண்டாம்.

38. வீழ்நாள் படாஅமை நன்றுஆற்றின் அ∴தொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல்.

ஒருவன் தான் தவறாது அறச் செயல்களைச் செய்து வருவானேயானால், அதுவே அவனது பிறவிக்கான வழியை அடைக்கும் கல்லாகும்.

பகவத் கீதை நிஷ்காமிய கன்மம் பற்றி விரிவாகக் கூறுகிறது. நிஷ்காமிய கன்மம் என்பது பலனை விரும்பாது செய்யும் கருமம் என்பது பொருள். போர்க்களத்தில் அர்ச்சுணனுக்குக் கிருஸ்ணன்; "போர் செய்வதற்காக வந்த நீ போர் புரிதலையும், எதிரிகளை அழிப்பதையும் கடமையாகக் கொள்ள வேண்டுமே தவிர அதன் பலன்களைப் பற்றிச் சிந்திக்கலாகாது. உன்னுடைய உரிமை செய்யும் காரியம் மட்டுமே. காரியத்தின் முடிவும், பயனும், உனக்கு உரிமையுரியன அல்ல. பயனில் பற்றுக் கொண்டு எதையும் செய்யாதே. செய்ய வேண்டியவற்றைச் செய்" என்றார். இது சமநிலை யோகம். திருவள்ளுவர் இதை இப்படிச் செய்கிறார்.

360. காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்.

விருப்பு, வெறுப்பு, அறியாமை ஆகிய குற்றங்களை ஒழித்து விட்டால் அவற்றால் துன்பம் வராது.

384. அறன் இழுக்காது அல்லவை நீக்கி மறன் இழுக்கா
மானம் உடையது அரசு.

ஆட்சிமுறைக்கு உரிய அறத்தில் தவறாமல், அறமல்லா வற்றை நீக்கி, வீரத்தில் குறைவுபடாத மனத்தை உடையவனே சிறந்த அரசன்.

அவா அறுத்தல், மெய் உணர்தல், இறை மாட்சி ஆகிய அத்தியாயங்களில் வள்ளுவர் கீதையில் கூறப்பட்ட சமநிலையோகத்தைப் பற்றிக் கூறுகிறார்.

466. செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.

அரசன் செய்யத் தகாத செயல்களைச் செய்வதனால் கெடுவான். செய்ய வேண்டிய செயல்களைச் செய்யாமல் விடுவதனாலும் கெடுவான்.

இதுவும் அர்ச்சுனனுக்குக் கீதையில் கிருஷ்ணனால் உபதேசிக்கப்பட்டது.

541. ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்து செய் வ∴தே முறை.

யாராக இருந்தாலும் அவர்களது குற்றத்தை ஆராய்ந்து இரக்கம் காட்டாமல் நடுவுநிலையில் நின்று தண்டனையளிப்பது நீதியுள்ள அரசனின் கடமை.

இதுவும் பகவத் கீதையில் கூறப்பட்டுள்ளது.

543. அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்.

அந்தணர் போற்றும் மறை நூலுக்கும் அறத்திற்கும் அடிப்படையாக நின்று உலகத்தைக் காப்பது அரசனது (செங்கோல்) கடமை.

இதுவும் பகவத் கீதையின் வாக்கியம். சமணரும் பௌத்தரும் அந்தணர்களை ஏற்பதில்லை.

550. கொலையிற் கொடியாரை வேந்துஒறுத்தல் பைங்கூழ்
களைகட்டதனொடு நேர்.

கொடியவர்களைக் கொலைத்தண்டனையால் அரசன் ஒறுத்தல் பயிரைக் காப்பாற்ற களைகளைக் களைவதற்கு நிகரான செயலாகும்.

இதுவும் பகவக் கீதையில் சொல்லப்பட்டுள்ளது.

கீதையில் யோகம். துறவு, சன்னியாசம், தியாகம், வேள்வி ஆகிய யாவும் சொல்லப்பட்டுள்ளன. துறவு சன்னியாசம் என்பன தாடியும் சடையும் வளர்த்துக் கொண்டு காட்டில் வாழ்வதல்ல. துறவு என்பது வாழ்வைத் துறப்பதல்ல. வாழ்வைத்துறத்தலாகாது என்பதை வலியுறுத்த எழுந்ததே பகவத்கீதை. எது உண்மையான துறவு என்பதைக் கீதை தெளிவாகக் கூறுகிறது. நாம் செய்யும் செயலின் பயனில் கொள்ளும் பற்றையும் ஆசையையும் துறப்பதே துறவு. அதுவே உண்மையான சன்னியாசம். உண்மையான தியாகமும் அதுவே. பற்றுகளை ஞானமான அக்கியினால் எரிப்பதே வேள்வி. வேதங்களில் பேசப்படும் வேள்விக்கும் இக்கருத்துப் பொருந்தும். மிருகங்களை அக்கினியில் இடுவது வேள்வியென்றோ யாக மென்றோ கொள்ளாது நமது ஆசைகளாகிய விலங்குகளை ஞான மெனப்படும் அக்கினியில் இட்டு எரிப்பதே வேள்வியும் யாகமும் எனக் கொள்வதே பொருத்தமாகும் என்று இந்திய தத்துவஞானம் என்ற நூலாசிரியர் பேராசரியர் சி. ல்‘மணன் கூறுகிறார். பக். 72.

இக்கருத்து பல குறள்களில் கூறப்பட்டுள்ளன.

46. அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின்
போஒய்ப் பெறுவது எவன்?

ஒருவன் அறநெறியில் இல்வாழ்க்கையைச் செலுத்தி வாழ்வானேயானால், அவன் அதை விட்டு துறவறம் மேற் கொள்ளத் தேவையில்லை.

48. ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா; இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து.

தவம் செய்பவர்களை தமது வழியில் ஒழுகச் செய்து தானும் அறந் தவறாது வாழ்கின்ற வாழ்க்கை தவம் செய்பவரை விட மிக்க வல்லமை உடைய வாழ்க்கை ஆகும்.

49. அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று.

அறம் என்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது இல் வாழ்க்கையே ஆகும்.

50. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

உலகில் வாழ வேண்டிய முறையில் இல்லறத்தில் வாழ்பவன் விணணுலகத்தில் உள்ள தெய்வத்தைப் போல மதிக்கப்படுவான்.

தவத்தால் உயர்வதை விட மிக உயர்ந்தது இல்வாழ்க்கையென்றும், அறவழியில் இல்வாழ்க்கை நடத்துவோர் தெய்வங்களாகப் பூசிக்கப்படுவர் என்றும் வள்ளுவர் கூறகிறர். இல்வாழ்வு வைதீக சமயங்கள் அனைத்திற்கும் பொருந்தும்.

254. அருளல்லது யாதெனில் கொல்லாமை கோறல்
பொருளல்லது அவ்வூன் தினல்.

அருள் எது என்றால் ஓர் உயிரையும் கொல்லா திருத்தல். அருளலல்லாதது எது என்றால் உயிரைக் கொன்று தின்னல்.

255. உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊன்உண்ண
அண்ணாத்தல் செய்யாது அளறு.

உயிர்கள் உடம்பு பெற்று வாழும் நிலமை, ஊண் உண்ணாதிருத்தலை அடிப்படையாகக் கொண்டது. ஊண் உண்டால் நரகம் அவனை விடாது.

259. அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று.

நெய் முதலிய பொருட்களைத் தீயில் சொரிந்து ஆயிரம் வேள்விகள் செய்வதை, உயிரைக் கொன்று அதன் உடலைத் தின்னாதிருத்தல் உயர்ந்தது.

321. அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாம் தரும்.

அறமாகிய செயல் எதுவென்றால் ஓர் உயிரையும் கொல்லாமையாகும். கொல்லுதல் அறமல்லாத செயல்கள் எல்லாவற்றையும் விளைவிக்கும்.

324. நல்லாறு எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி.

நல்ல வழியென்று அறநூல்களால் சொல்லப்படுவது எது என்றால், எந்த உயிரையும் கொல்லாத அறத்தைப் போற்றும் நெறியாகும்.

இவற்றைவிட இவ் அத்தியாயத்தில் கொல்லாமை பற்றிப் பல விடயங்கள் கூறப்பட்டுள்ளன.

262. தவமும் தவமுடையார்க்கு ஆகும் அவம்அதனை
அ∴திலார் மேற்கொள் வது.

தவக்கோலம், தவஒழுக்கம் உடையவர்களுக்கே பொருந்தும். அக்கோலத்தைத் தவ ஒழுக்கமில்லாவர்கள் மேற்கொள்வது வீண் முயற்சியாகும்.

268. தன்உயிர் தான்அறப் பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும்.

தன்உயிர், தான் என்ற பற்றுக்களை அறுத்தவனை, அவனது பெருமையை உணர்ந்து உலகத்தில் வாழும் உயிர்களெல்லாம் தொழும்.

272. வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்நெஞ்சம்
தான்அறி குற்றப் படின்?.

தனது மனம் அறியக் குற்றம் செய்தவன் உயர்ந்த தவக் கோலத்தை உடையவனாக இருந்தாலும் அதனால் எந்தப் பயனும் வராது.

273. வலிஇல் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.

மனதை அடக்க முடியாதவன் மேற் கொண்ட தவக் கோலம், பசு, புலியின்தோலைப் போர்த்திக் கொண்டு பயிரை மேய்வதைப் போன்றதாகும்.

உயிரானது பிறப்பதுமில்லை இறப்பதுமில்லை. அழிவது உடலே. நைந்து போன ஆடைகளைத் தள்ளி விட்டுப் புது ஆடைகளை அணிவது போல, ஆன்மா உடலைக் களைந்து விட்டு புதிய உடலைப் பெறுகிறது என்கிறது கீதை. பிறப்பதும் இறப்பதும் உடல் தான். இதன் மூலம் உயிர்திரும்பத் திரும்ப பிறக்கிறது என்கிறது கீதை.

இதை வள்ளுவன் இப்படிச் சொல்கிறான்.

338. குடம்பை தனித்துஒழியப் புள்பறந் தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு.

உடம்போடு உயிருக்குள்ள உறவானது, கூட்டோடு பறவைக்குள்ள உறவை ஒத்தது.

339. உறங்கு வதுபோலும் சாக்காடு; உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

இறப்பு எனப்படுவது ஒருவன் உறங்குவதைப் போன்றது; இறப்பு எனப்படுவது உறக்கம் நீங்கி விழித்துக் கொள்வதைப் போன்றது.

334. நாள்என ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்

வாள்அது உணர்வார்ப் பெறின்.

வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்தால், நாள் என்பது ஒரு கால அளவு. அது உடம்பிலிருந்து உயிரைப் பிரித்து அறுக்கும் ஒரு வாள் ஆகும்.

38. வீழ்நாள் படாஅமை நன்றுஆற்றின் அ∴தொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல்.

ஒருவன் அறம் செய்யத்தவறிய நாள் ஏற்படாவதாறு அறத்தைச் செய்வானானால் அதுவே அவன் உடலோடு வாழும் பிறவி வழியை அடைக்கும் கல்லாகும்..

இங்கு உயிர் (ஆத்மா) தம் வினைக்கேற்பப் பல பிறவிகள் எடுப்பதாக வள்ளுவர் கூறுகிறார். இது வைதீக சமயங்களுக்குப் பொருந்தும்.

126. ஒருமையுள் ஆமைபோல் ஐந்துஅடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து.

ஒரு பிறப்பில் ஆமையைப் போல ஐந்து பொறிகளையும் அடக்கி வாழ்ந்தால் அது அவனுக்கு ஏழு பிறவிக்கும் சிறந்த பாதுகாப்பாய் இருக்கும்

356. கற்றுஈண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றுஈண்டு வாரா நெறி.

கற்க வேண்டியவற்றைக் கற்று, உணர வேண்டிய உண்மைப் பொருளை உணர்ந்தவர்கள், மீண்டும் பிறவி எடுக்காத நிலையை அடைவார்கள். இதே கருத்தை 357 ஆவது குறளும் கூறுகிறது.

361. அவாஎன்ப எல்லா உயிர்க்குமஎஞ் ஞான்றும்
தவாஅப் பிறப்புஈனும் வித்து.

எல்லா உயிர்களுக்கும் எக்காலத்திலும் நீங்காமல் வருகின்ற பிறவி என்ற துன்பத்திற்கு பற்று என்பதே விதை ஆகும்.

398. ஒருமைக் கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து.

ஒருபிறப்பில் தான் கற்ற கல்வியானது அப்பிறப்பிற்கு மட்டுமல்லாமல் அவனது ஏழு பிறப்பிற்கும் உதவும் தன்மை உடையதாகும்.

அருச்சுணனுக்கு ஏற்பட்ட பற்றைக் காரணமாகக் கொண்டு உயிர்களுக்கு ஏற்படும் துன்பத்திற்கான காரணங்களையும், அவற்றை நீக்கும் வழிவகைகளையும் குறிப்பிட்டு, அவ்வுயிர்கள் சென்று சேரவேண்டிய இறைவனின் இயல்புகளைப் பற்பல சுலோகங்களில் பற்பல விதமாக கிருஷ்ணர் எடுத்துக் கூறுவதாகக் கீதை வாசகங்கள் அமைந்துள்ளன. அதே போன்ற வாசகங்களையே வள்ளுவரும் உயிர்களின் ஆத்ம ஈடேற்றத்திற்காகக் கூறுவதைக் காண்கிறோம்.

வேதம், உபநிடதம், பகவத்கீதை, பதிணெண் புராணங்கள், இதிகாசங்கள் யாவற்றினதும் பிழிசாறுதான் திருக்குறள் என்பதை நான் அடித்துச் சொல்வேன். கீதை கூறியவற்றைத் திருக்குறளும் கூறுகிறது என்பதைக் கண்டோம். மீண்டும் நாம் வேதத்திற்கு சென்றால்,

முதலில் வேதகாலத் தெய்வங்களை நோக்கினால் இந்திரன் வேதகால மக்களின் முதல் தெய்வம். அடுத்த தெய்வம் அக்கினி, மூன்றாவதாக மக்கள் வணங்கிய தெய்வம் மழையைத் தரும் வருணன். அதற்கடுத்த தெய்வம் சூரியன்,

சந்திரன் போன்றோர். சிவனைப் பற்றியும் விஷ்ணுவைப் பற்றியும் வேதங்கள் கூறுகின்றன.

ஒரு செய்யுளின் பொருள், ஒரு செயலின் பயன் என்பன சமய ரீதியாகவும், விஞ்ஞான ரீதியாகவும், தர்க்க ரீதியாகவும் ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும். அப்படியான செய்யுள்களும் செயல்களும் தான் காலங்கடந்தும் நிலைத்து நிற்கும். இந்த வகையில் தான் வள்ளுவனது குறள்கள் உள்ளன.

1. அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி
   பகவன் முதற்றே உலகு.

வைதீக சமயங்கள் சூரியனைக் கடவுளாக ஏற்றுக் கொள்கின்றன. இரவும் பகலும் காலநிலை மாற்றங்களும், சூரியனால் தான் உண்டாகின்றன. விஞ்ஞான ரீதியாகப் பார்த்தாலும் இது உண்மையென்று தெரியும். இதனால் முதலாவது குறளில் வள்ளுவன் ஆதிபகவன் என்று குறிப்பிடுவது சூரியனையே.

எழுத்துகளையெல்லாம் அகரத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளன. அது போல் உலகம் ஆதிபகவானான (கடவுள்) சூரியனை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

வேதகாலத்தில் இந்திரன் மக்களுக்கு நன்மை செய்பவனாகவும் பசுக்களைக் காக்கும் காவலனாகவும் பகைவர்களை அழிக்கும் சேனைத் தலைவனாகவும் இருந்தான்.

ருக் வேதத்தில் இரண்டாவது மண்டலத்தில் இருபத்தோராவது சூக்தத்தில் இருக்கும் ஆறாவது பாடல் இந்திரனைப் பற்றிச் சொல்கிறது.

“இந்திரனே, எமக்கு மிகச் சிறந்த செல்வத்தை அளி

பக்கம் சாராத மனதைக் கொடு
நோயில்லாத உடலைக் கொடு
மனதிற்குச் சாந்தியைக் கொடு''

''இந்திரனே உன்னை வழிபடுபவரை எந்தப் பாவமும் எந்தத் துன்பமும் அணுகமாட்டாது. பகைவர்களால் வெற்றி கொள்ள முடியாது''

''இந்திரனே பாவங்கள் எம்மைப் பின்தொடர்ந்து வராதபடி பாதுகாப்பாயாக''

''நல்லவை மட்டுமே எமக்கு எப்பொழுதும் தா.'' இப்படி அப்பாடல் கூறுவதால் இந்திரன் வலிமைமிக்க தெய்வமாக சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான். அதனால் தான்

22. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண்டற்று.

பற்றுக்களைத் துறந்தவர்களின் வலிமையை அளந்து கூறுதல், உலகத்தில் இதுவரையில் பிறந்து இறந்தவர்களை எண்ணிக் கணக்கிடுவதைப் போன்றது என்று வள்ளுவன் கூறுவதில் இருந்து அவர்களது வலிமை வேதகால இந்திரனுக்கு ஒப்பானது என்று புலனாகிறது. அதனால் தான் ஐந்து புலன்களால் வரும் ஆசையை அடக்கியவனுடைய வலிமைக்கு வானுலகத்தாரின் தலைவாகிய இந்திரனை சான்றாகச் சொல்கிறான்.

25. ஐந்துஅவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலும் கரி.

வருணனை வேதகால மக்கள் மழைக்கடவுளாக வணங்கினர். இன்றும் வருணன் மழைக் கடவுளாகவே வணங்கப்படுகிறான்.

வருணனைப் பற்றிய வேதப்பாடல்கள் வைரங்களாக மின்னுகின்றன.

“வல்லமை அனைத்துப் பெற்ற வருணனே உன்னை வணங்குகிறோம்.”

“மரம், செடி, கொடிகள் அனைத்தும் சூல் தரித்து விட்டன. எமது உணவுகள் அவற்றின் கர்ப்பப்பைகளிலேயே உள்ளன. அவற்றை நிரப்பியது நீயன்றோ?”

“எமக்கு உணவைத்தரும் கருவூலங்களாகக் கடலும், மண்ணும் இருக்கின்றன. உன் மக்களாகிய நாம் இவற்றிடமிருந்து சிறந்த உணவுகளைப் பெறுகிறோம்.”

“சர்வசக்தி வாய்ந்தவனே!
நீ எங்கள் நண்பன்
எம்மைப் பாதுகாத்து
உணவைக் குவித்து வைத்திருக்கும்
நீ எங்கள் மன்னன்”

இப்படி வேதப்பாடல் கூறுகிறது

வள்ளுவன் வான் சிறப்பு என்ற அத்தியாயத்தை கடவுள் வாழ்த்துக்கு அடுத்ததாக வைத்துள்ளார்.

11. வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணராற் பாற்று

மழை பெய்வதால் உலகம் வாழ்கிறது. அதனால் உலகத்தில் வாழும் உயிர்களுக்கு மழையானது அமிழ்தம் என்று உணரத்தக்கது.

12. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

உயிர்களுக்கு உண்ண உணவுப் பொருட்களை விளைவித்துக் கொடுப்பதோடு, பருகுபவர்களுக்கு ஓர் உணவாகவும் இருப்பது மழையாகும்.

13. விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி.

மழை பெய்யாதுவிடின் கடலினாலே சூழப்பட்ட அகன்ற உலகில் வாழும் உயிர்களைப் பசி உள்ளே நிலைத்து நின்று வருத்தும்.

14. ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

மழை எனப்படும் வருவாய் குறையுமேயானால் உயிர்களுக்கு உணவளிக்கும் உழவர் தமது கலப்பையைக் கொண்டு உழமாட்டார்.

15. கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று ஆங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை

பெய்யாமல் வாழ்வைக் கெடுப்பதும், கெடுத்தவர்களின் வாழ்வை பெய்து சிறப்பிப்பதும் மழையாகும்.

16. விசும்பின் துளிவீழின் அல்லால்மற்று ஆங்கே
பசும்புல் தலைகாண்பு அரிது.

மழைத்துளியானது வானத்தில் இருந்து விழாதுவிடுமாயின் மண்ணில் பசிய புல்லின் நுனியைக் கூடக் காண முடியாது.

17. நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்துஎழிலி
தான்நல்காதாகி விடின்.

மேகமானது கடலிடத்தே நீரினைப் பெற்று மழையாகப் பெய்யாதுவிடின் நீர் கொடுத்த பெருங்கடலும் வற்றிவிடும்.

18. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்

வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.

வானமானது மழை பெய்யாமல் போகுமானால் இவ்வுலகில் வானோர்க்காக நடைபெறும் திருவிழாக்களும், தினப் பூசைகளும் நடைபெறாது.

19. தானம் தவம்இரண்டும் தங்கா வியன்உலகம்
வானம் வழங்காது எனின்.

வானம் மழையை வழங்காது விடுமேயானால் பூவுலகில் தானம் வழங்கலும் தவம் செய்தலும் இல்லாது ஒழிந்துவிடும்.

20. நீர்இன்று அமையாது உலகுஎனின் யார்யார்க்கும்
வான் இன்றுஅமையாது ஒழுக்கு.

நீர் இல்லாவிட்டால் உலகம் வாழாது. அத்துடன் மழை இல்லாவிட்டால் உலகில் ஒழுக்கமும் நிலைபெறாமல் போகும்.

ருக் வேதத்தில் உள்ள வருணனைப் பற்றிய பாடல்களைவிட வள்ளுவனது வான் சிறப்புப் பற்றிய குறள்கள் சிறப்புற்றிருக்கின்றன. இப்படியிருக்கையில் திருக்குறள் வேதத்தின் பிழிசாறு என்று கூறுவதில் என்ன தவறு இருக்கிறது.

அடுத்து வேதம் சமூகத்தைப் பற்றி மிகவும் விரிவாகக் கூறுகிறது. ருக் வேதத்தில் ஆறாவது மண்டலத்தில் உள்ள எழுபத்தைந்தாவது சூக்தத்தில் உள்ள பாடல் இப்படிக் கூறுகிறது.

“சமூகத்தை நேசி. அதற்கு மதிப்புக்கொடு.”

“பசியால் வாடுவோருக்கு உணவு கொடு”

“துன்பப்பட்டோரின் துக்கத்தைப் போக்கு”

“உன் சக்தியைப் பெருக்கு, ஆற்றலை வள. செயல்களுக்கு உனக்கு ஆற்றலும் சக்தியும் தேவை”

“பகைவனிடம் பணிந்து போகாதே”

“உயர்ந்த செயல்களுக்காக உன்னிடமுள்ள துணிவு உச்சநிலையை அடையட்டும்”

“மக்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்து, அவர்களுக்கு வழிகாட்டு”

“பலவீனர்களையும் முதுமைவடைந்தவர்களையும் தவசிகளையும் பிதிர்களையும் உணவு கொடுத்துக் காப்பாற்று. சமூகத்தைப் பாதுகாப்பது பலசாலியின் கடமை” என்கிறது இப்பாடல்.

இதை வள்ளுவர் தனது குறள்களில் வலியுறுத்தியுள்ளார். உதாணரமாக இல்வாழ்க்கை, விருந்தோம்பல், செய்ந்நன்றி அறிதல், நடுவுநிலைமை, ஈகை, புகழ், இன்னா செய்யாமை, இறைமாட்சி, சுற்றம் தாழால், வினைத்திட்பம், வினை செயல் வகை, நட்பு, நட்பு ஆராய்தல், உழவு, இரவு போன்ற அதிகாரங்களில் மேற்சொன்ன கருத்துக்களை வள்ளுவன் வலியுறுத்துகிறான்.

வேதகால மக்கள் பலவகையான விளையாட்டுக்களில் ஈடுபட்டுத் தமது பொழுதைக் கழித்தனர். அவர்களது முக்கிய மான விளையாட்டு சூதாட்டமாகும்.. சூதாட்டத்தில் பணயமாக பொருட்கள் மட்டுமன்றி மனிதர்களும் வைக்கப்பட்டனர் (பாரதம்).

சூதாட்டத்தில் தோற்ற ஒருவனைப் பற்றி வேதத்தில் உள்ள பாடல் இப்படிக் கூறுகிறது.

“என்மனைவியும், மாமியும் என்னை வெறுக்கின்றனர்”.

“எனக்கு இரக்கம் காட்டும் நண்பர்கள் எவரும் இல்லை. அத்துடன் எனது துன்பத்தைப் பகிர்ந்து கொள்ள இனிமேல் தான் பூமியில் யாராவது பிறக்க வேண்டும்.”

சூதாடி யாருக்கும் பயன்படமாட்டான். அவன் வலு இழந்த குதிரையைப் போன்றவன். அது போல் தான் நானும்.”

இப்படி வேதப்பாடல் கூறுகிறது.

இதை வள்ளுவர் சூது என்ற அதிகாரத்தில் பின்வருமாறு கூறுகிறார்.

931. வேண்டற்க வென்றிடினும் சூதினை; வென்றதூஉம்
தூண்டில்பொன் மீன்விழுங்கி யற்று.

வெற்றி கிடைத்தாலும் ஒரு போதும் சூதாடுவதை விரும்பக் கூடாது. அந்த வெற்றி தூண்டிலை இரை என்று நினைத்து மீன் விழுங்குவதைப் போன்றது.

932. ஒன்றுஎய்தி நூறுஇழக்கும் சூதர்க்கும் உண்டாம்கொல்
நன்றுஎய்தி வாழ்வதோர் ஆறு.

ஒரு பொருளைப் பெறுவதற்காக நூறு பொருளை இழக்கும் சூதாடிகளுக்கு, நன்மை பெற்று வாழும் சிறப்பான வாழ்க்கை உண்டாகாது.

933. உருள்ஆயம் ஓவாது கூறின் பொருளாயம்
போஓய்ப் புறமே படும்.

ஒருவன் உருளுகின்ற சூதாட்டக் கருவியை உருட்டி இடைவிடாமல் சூதாடினால், அவனுடைய பொருள் யாவும் உருண்டோடிச் சென்று பகைவரை அடையும்.

934. சிறுமை பலசெய்து சீர்அழிக்கும் சூதின்
வறுமை தருவது ஒன்று இல்.

ஒருவனுக்கு, துன்பங்கள் பலவற்றையும் உண்டாக்கி, அவனது புகழைக் கொடுக்கின்ற சூதைப்போல வறுமை தருவது வேறொன்றுமில்லை.

935. கவறும் கழகமும் கையும் தருக்கி
இவறியார் இல்லாகி யார்.

சூதாடும் கருவியையும், சூதாடும் இடத்தையும், சூதாடும் செயலையும் கைவிடாதவர், எல்லாப் பொருள்களையும் உடையவராக இருந்தாலும் ஈற்றில் ஒன்றுமில்லாதவராகி விடுவார்.

936. அகடுஆரார் அல்லல் உழப்பர் சூதுஎன்னும்
முகடியால் மூடப்பட் டார்.

சூது என்று சொல்லப்படுகின்ற மூதேவியால் விழுங்கப்பட்டவர், வயிறு நிறைய உண்ண முடியாதவராகிப் பல துன்பங்களுக்குட்பட்டு வருந்துவர்.

937. பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்.

சூதாடும் இடத்தில் ஒருவன் தனது காலத்தைக் கழிப்பானானால், அது அவனது மூதாதைர் தேடி வைத்த செல்வத்தையும் நற்பண்புகளையும் கெடுக்கும்.

938. பொருள் கெடுத்துப் பொய்மேல் கொளீஇ அருள்கெடுத்து
அல்லல் உழப்பிக்கும் சூது.

சூது, உள்ள பொருள்களையும் அழித்துப் பொய் சொல்லும் நிலைக்கு ஆளாக்கி, அருளையும் கெடுத்துப் பல வகையான துன்பத்தைக் கொடுத்து வருத்தும்.

939. உடைசெல்வம் ஊண்ஒளி கல்விஎன்று ஐந்தும்
அடையாவாம் ஆயம் கொளின்.

ஒருவன் சூதாடுவதை மேற்கொண்டால், அது ,புகழ், கல்வி, செல்வம், உணவு, உடை ஆகிய ஐந்தையும் அவன் அடைய முடியாத நிலை உண்டாக்கும்.

940. இகழ்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்
உழத்தொறூஉம் காதற்று உயிர்.

பொருள் வைத்துச் சூதாடி அதை இழக்க இழக்க மேலும் மேலும் சூதாடவேண்டு மென்ற ஆசை அதிகரிக்கும். சூதாட்டம் போல, உடல் துன்பப்பட்டு வருந்த வருந்த உயிர் வாழ வேண்டும் என்ற ஆசை மிகுந்து வரும்.

வேதப்பாடல்களை விடக் குறட்பாக்கள் சிறப்பானவை. வேதப்பாடல்களில் கூறப்படாத பல தகவல்கள் குறளில் கூறுப்பட்டுள்ளன.

இந்த நிலையில் திருக்குறள் வேத சாரம் என்று சொல்வதில் என்ன தவறு இருக்கிறது?

அடுத்துச் சைவ சித்தாந்தத்தைப் பார்ப்போம்.

சைவசித்தாந்தம் தமிழ்நாட்டில் மட்டுமே கைக்கொள்ளப் பட்டதால் தமிழரின் தத்துவமென்று அறிஞர்கள் கூறுவார்கள். இருப்பினும் சைவ சித்தாந்த பிரமான நூல்களான வேதங்களும், ஆகமங்களும் வட மொழியிலேயே இருக்கின்றன. இதற்கான காரணத்தை மறை மலை அடிகளார், திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை ஆகியோர் கூறியுள்ளனர். அவர்களின் கூற்றுப்படி வேதங்களும் ஆகமங்களும் தமிழிலேயே இருந்தன. தமிழ் நாட்டிற்கு வந்த ஆரியர் அவற்றை வடமொழியில் மொழிபெயர்த்துவிட்டுத் தமிழ்மொழி மூல நூல்களை அழித்து விட்டனர் என்பது சரியாக இருக்கலாம். இதற்கு உதாரணமாக இராவணனால் சாம வேதம் பாடப்பெற்றது என்று கூறியுள்ளனர். இதைத்தவிர வேதங்களும் ஆகமங்களும் தமிழில் தான்

தோன்றின என்று பல பெரியார்கள் பல்வேறு விதமான காரணங்களைக் கூறியுள்ளனர்.

வேதங்களும் ஆகமங்களும் சைவ சித்தாந்தத்தின் பிரமாணநூல்கள், இவற்றுள் வேதங்களைப் பொதுப்பிரமாணமாகவும் ஆகமங்களைச் சிறப்புப் பிரமாணமாகவும் சைவ சித்தாந்தம் கொண்டுள்ளது. ஒவ்வொரு ஆகமமும் ஞான காண்டம், யோக காண்டம், கிரியா காண்டம், சரியா காண்டம் என நான்கு பகுதிகளை உடையது. இவற்றுள் ஞான காண்டமே தத்துவக் கருத்துக்களை உடையது. மேற் சொன்ன நான்கு கண்ட வகைகளுள் கிரியா காண்டத்தை விலக்கி மற்ற மூன்று காண்டங்களைப் பற்றியும் திருக்குறள் கூறுகிறது. இவற்றை வேத உபநிடதங்கள் கூறும் ஞானம்; யோகம் பற்றிய ஆய்வின் போது கூறியுள்ளேன். வேதத்தில் கூறப்பட்டபடி கிரிகைகளைத் திருக்குறள் ஏற்கவில்லையே தவிர சரிகை யோகம், ஞானமார்க்க மூலம் கிரிகைள் ஞானமென்றும், அக்கிரிகைகள் மேலானவை என்றும் வள்ளுவர் கூறுகிறார்.

48. ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா; இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து.

தவம் செய்பவர்களை தமது வழியில் வாழச் செய்து தானும் அறந்தவறாத இல்வாழ்க்கை வாழ்பவன் தவஞ்செய்பவர் களை விட மிக்க வல்லமையுடைய வாழ்க்கை வாழ்பவன்.

87. இனைத்துணைத்து என்பதொன்று இல்லை; விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்.

விருந்தோம்பலாகிய வேள்வியில் பயன் இவ்வளவு என்று அளவுபடுத்திக் கூறத்தக்கது அன்று; அது விருந்தினன் தகுதிக்கு ஏற்ற அளவினதாகும்.

88. பரிந்துஓம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி

வேள்வி தலைப்படா தார்.

விருந்தினரை ஓம்பி அந்த வேள்வியில் ஈடுபடாதவர், பொருட்களை வருந்திக்காத்து (பின்பு இழந்து) பற்றுக்கோடு இழந்தோமே என்று இரங்குவர்.

இந்திரப் பதவியை அடையவும் தேவர்களைப் போல வாழவும் நாட்டிற்குத் தேவையான வளங்களைப் பெறவுமே வேள்விகள் செய்வதாகப் புராண இதிகாசங்கள் கூறுகின்றன. ஆனால் திருவள்ளுவர் அதை இப்படிக் கூறுகிறார்.

121. அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்.

*அடக்கம் ஒருவனை உயர்த்தித் தேவருள் சேர்க்கும்; அடக்கமில்லாதிருத்தல் பொல்லாத இருள்போன்ற தீய வாழ்க்கையில் செலுத்திவிடும்*

213. புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல்அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

பிறருக்கு உதவி செய்து வாழும் ஒப்புரவைப் போல நல்லனவாகிய வேறு அறப்பகுதிகளைத் தேவ லோகத்திலும் இவ்வுலகத்திலும் பெறுதல் இயலாது

225. ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்.

தவவலிமை உடையவரின் வலிமை பசியைப் பொறுத்துக் கொள்ளலாகும். அதுவும் அப்பசியை உணவு கொடுத்து மாற்றுகின்றவரின் ஆற்றலுக்கும் பிற்பட்டதாகும்.

இக்குறள்கள் மூலம் சரியாகாண்டமும், கிரியா காண்டமும் கூறப்பட்டுள்ளது.

சைவசித்தாந்தம் உயிர்களைக் கொன்று தின்னுதல் பாவம் என்று கூறுகிறது. ஊன் உண்பவன் சமயக் கிரியைகள்

செய்யக்கூடாது. குளிக்காமல் கூட கோயிலுள் செல்லக் கூடாதென்கிறது. அத்துடன் தீட்சை பெறுவோர் புலால் உண்பதில்லை. இது பற்றி ஆறுமுகநாவலர் மிகவும் விரிவாகக் கூறியுள்ளார். அதைவிட நாயன்மார்கள், தொண்டர்கள் யாரும் புலாலைப் புசித்ததில்லை.

259. அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று.

நெய் முதலிய பொருட்களைத் தீயில் சொரிந்து ஆயிரம் வேள்விகளைச் செய்தலை விட, ஒன்றின் உயிரைக் கொன்று உடம்பைத் தின்னாதிருத்தல் நல்லது.

நெய்யுடன் ஆடுமாடு குதிரை போன்ற மிருகங்களை அக்கினியில் இடுவது வழக்கம். இப்படியான யாகங்கள் மூலம் பெரும் பயன்கிடைக்குமென மக்கள் நம்பியிருந்த காலத்தில் வேள்வி செய்வதை விட உயிர்க்கொலை செய்யாதிருந்தால் வேள்வியை விடச் சிறந்த பயன் உண்டாகுமென்று கூறினால் யார் ஏற்பார்கள்? கூறுபவர்களை எதிரிகளாக நினைப்பார்கள். அந்த நிலைதான் வள்ளுவருக்கு ஏற்பட்டது. பெரும் சமய வாதிகளும், அறிஞர்களும், பிராமணர்களும், அரசர்களும் இதற்காகத்தான் வைதீக சமயத்தவரான வள்ளுவரைச் சமணர் என்றும் பௌத்தர் என்றும் கூறினர்.

சைவசித்தாந்தத்தின் கருத்து “கடவுள்” என்ற சொல்லில் தங்கியுள்ளது. “கடவுள்” என்பதைத் தெய்வம் என்றும் பழந்தமிழ் நூல்கள் பல சொல்கின்றன. திருவள்ளுவர் தனது குறள் பாக்களின் தெய்வம் என்ற வார்த்தையை பாவித்துள்ளார்.

“உலகை இயக்குபவன், உலகைக் கடந்தவன், உலகுள் உள்ளவன் இவை சைவ சித்தாந்தக் கருத்துக்கள். இதை தொல்காப்பியமும், புறநானூறும் கூறுகிறது. கடவுளைப் பற்றிய சைவ சித்தாந்தக் கருத்துக்களை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதலாவது பிரிவு கடவுள் உண்டென்று நிருபிப்பது. அடுத்த பிரிவு கடவுளின் குணங்களையும் இயல்புகளையும் கூறுவது. முதலாவது பிரிவை மேலும் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை சுபக்கம், பரபக்கம் என்பனவாகும். கடவுள் உண்டென்பதை ஆதாரங்களுடன் நிறுவுது சுபக்கம். கடவுள் இல்லையென வாதிப்போரது வாதங்கள் பொருந்தா தென்பதை மறுப்பது பரபக்கம்.

வள்ளுவன் ஆகமம் கூறும் இரண்டு வழிகளாலும் கடவுள் உண்டென்பதை நிருபிக்கிறான். பிரத்தியட்சம், அநுமானம், ஆப்த வாக்கியம் ஆகியன பிரமாணங்களாகும். இம்மூன்று முறைகளையும் வள்ளுவன் தன் குறள்களில் பாவித்துள்ளான்.

ஒருபொருளை அனுபவத்தால் அறிந்த மகான்களின் வாய்மொழிகளை ஆப்த வாக்கியமென்று ஆகமம் கூறுகிறது. இறை அருள் பெற்ற அனுபூதி மான்களின் வாக்குகள் தான் ஆய்த்த வாக்கியங்கள். இதை வள்ளுவா் தமது குறளில் அடிக்கடி கூறுகிறாா்.

21. ஒழுக்கத்து நீத்தாா் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு.

சிறந்த ஒழுக்கமுடையவராக இருந்து பற்றுக்களை விட்டவா்கள் கூறியவற்றைப் போற்றிக் கூறுவது நூல்களின் துணிவாகும்.

28. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்

பயன் நிறைந்த மொழிகளில் வல்ல சான்றோரின் பெருமையை, உலகத்தில் அழியாமல் விளங்கும் அவர்களுடைய மறை மொழிகளே காட்டி விடும்.

61. பெறுமவற்றுள் யாம்அறிவது இல்லை அறிவுஅறிந்த
மக்கட்பேறு அல்ல பிற.

ஒருவன் பெற வேண்டிய செல்வங்களுள் அறிய வேண்டியவற்றை அறியக் கூடிய மக்களைப் பெறுவதே மிக உயர்ந்த செல்வமாகும். இங்கு அறிஞர்களின் வாய் மொழிகளை அறிந்து கொள்ளத்தக்க மக்களைப் பெற வேண்டுமென்று வள்ளுவன் கூறுகிறான்.

441. அறன் அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறன் அறிந்து தேர்ந்து கொளல்.

அறம் உணர்ந்தவராய்த் தன்மை விட மூத்தவராய் உள்ள அறிவுடையவர்களின் நட்பை, கொள்ளும் வகையில் அறிந்து ஆராய்நந்து கொள்ள வேண்டும்.

442, 443, 444, 445, 446 போன்ற குறள்களும் இதை வலியுறுத்துகின்றன.

அடுத்து ஆன்மாக்கள் பிறப்பதற்கும் இறப்பதற்கும் இன்ப துன்பங்களை அனுபவிப்பதற்கும் கன்மம் தான் காரணம் என்று சைவசித்தாந்தம் கூறுகிறது. மெய் உணர்தல் என்னும் அதிகாரத்தில் உள்ள குறள்கள் இதை மெய்ப்பிக்கின்றன. அத்துடன் பின்வரும் குறள்களும் விரிவாககக் கூறுகின்றன.

62இ 126இ 138இ 208இ 226இ 255இ 290இ 296இ 319இ 330இ 370இ 374இ 380இ 603இ 1042இ 1045

இறைவனது இயல்பு பற்றி சைவ சித்தாந்தம் கூறுவதையே வள்ளுவரும் கூறுகிறார். சைவசித்தாந்தம் இறைவன் எண் குணத்தான் என்கிறது அதை வள்ளுவர்

9. கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

கேட்கமுடியாத காதுகள், பார்க்க முடியாத கண்கள் போல எண் குணங்களை உடைய கடவுளின் திருவடிகளை வணங்காத தலை பயனற்றது.

கண்ணில்லாத பலர் உலகில் வாழ்கிறார்கள். செவி இல்லாத பலர் உலகில் வாழ்கிறார்கள். ஆனால் தலையில்லாத எந்த உயிரும் இல்லை. அதே போல இறைவனில்லாத உலகமும் இல்லை.

முதலாவது அதிகாரமான கடவுள் வாழ்த்தில் கூறுப்பட்ட அனைத்துக் குறள்களும் சைவ சித்தாந்தத்திற்குப் பொருந்தும். அவற்றினுள் சில எல்லாச் சமயங்களுக்குப் பொருந்தும். கடவுளைப் பற்றி எல்லாச் சமயங்களும் ஒன்றைத்தான் கூறியுள்ளன. கடவுளின் குணங்கள், செயல்கள், நடத்தைகள் அவர் வாழுமிடங்கள் பற்றி வைதீக சமயங்கள் கூறுவதையே வள்ளுவர் கூறியுள்ளார். அவைதீக சமயங்கள் கடவுளுக்கும் ஆன்மாவுக்கும் உலகிற்கும் மறுமைக்கும் தமது நூல்களில் பாவித்த எந்த ஒரு சொல்லையும் வள்ளுவர் பயன்படுத்த வில்லை.

சிவஞானபோதம், சிவப்பிரகாசம், தொல்காப்பியம், புறநானூறு, திருமந்திரம், தேவார திருவாசகங்கள் கூறும் கடவுளின் இயல்புகள் பற்றித் திருக்குறளும் கூறுகிறது. அவை வைதீக நூல்களென்றால் திருக்குறள் எப்படி அவைதீக சமய நூலாக முடியும்.?

அடுத்து ஆன்மா ஒரு போதும் தனித்து நிற்காது. அது எப்பொழுதும் ஏதாவது ஒன்றைச் சார்ந்தே நின்றும் என்கிறது சைவசிந்தாந்தம். அதையே வள்ளுவரும் சொல்கிறார்.

452. நிலத்துஇயல்பால் நீர்திரிந்து அற்றாகும் மாந்தர்க்கு
இனத்துஇயல்பது ஆகும் அறிவு.

சேர்ந்த நிலத்தின் இயல்பால் நீர் வேறுபட்டு, அந்நிலத்தின் தன்மையுடையதாக மாறும். அதுபோல மக்களின் அறிவு இனத்தின் தன்மைக்கேற்பமாறும். நாம் மழை நீரை ஆத்மா எனக் கொண்டால் அந்நீர் விழும் இடத்தைப் பொறுத்து அந்நிலத்திற்குரிய பண்பைக் கொண்டுவிடும். கடலில் விழுந்தால் உப்புச் சுவை, நன் நீரேரியில் விழுந்தால் நல்ல சுவை. இதைத் தவிர மக்கள் சேரும் இனம் பற்றிப் பல இடங்களில் வள்ளுவர் கூறியுள்ளார். பெரியாரைத் துணைக் கோடல், சிற்றினம் சேராமை, நட்பு, நட்பு ஆராய்தல், பழைமை, தீ நட்பு, கூடா நட்பு ஆகிய அதிகாரங்களை உதாணமாகக் கொள்ளலாம்.

ஆணவத்தைப் பற்றிக் கூறாது அதை நீக்கும் வழிவகைகளையும் அது நீங்கினால் அடையும் நன்மைகளையும் சொல்கிறார்.

115. கேடும் பெருக்கமும் இல்லல்ல; நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க்கு அணி.

கேடும் ஆக்கமும் வாழ்வில் இல்லாதவையல்ல; ஆகையால் நெஞ்சில் நடுவுநிலை தவறாமல் இருத்தலே சான்றோர்க்கு அழகு.

118, 119, 121, 122, 123, 124, 125, 126, 127, 128, 129, 131, 134, 135, 136, 137, 138, 140, 152, 154, 156, 158,

160 மேற்கூறப்பட்ட இலக்கங்களை உடைய குறள்கள் ஆணவ மலம் நீங்கியோர் பெறும் நிலை பற்றிக் கூறுகிறது.

ஆணவம் நீங்க வேண்டுமானால் எப்படி நடக்க வேண்டுமெனப் பின்வரும் இலக்கங்களை உடைய குறள்கள் கூறுகின்றன. 161, 162, 163, 164, 165, 166, 167, 168, 169, 170, 171, 172, 173, 174, 175, 176, 177, 178, 179, 180

இறைவனது அருளைப் பெறுவதற்குச் சைவசிந்தாந்தம் சரிகை, கிரிகை, யோகம், ஞானம் என்ற நான்கு மார்க்கங்களையும் கூறுகிறது. ஆகமம் முப்பொருட்களைப் பற்றிக் கூறுவதைப் போலத் திருக்குறள் முப்பாலைப் பற்றிக் கூறுவதோடு இம்மையிலும், மறுமையிலும் இன்பமாக வாழக் கிரிகை தவிர்ந்த ஏனைய மூன்று வழிகளையும் ஏற்றுக் கொள்கிறது. சரிகைத் தொண்டாக உயிர்களுக்குச் சேவை செய்வதைப் பற்றிக் கூறுகிறது. யோக நிலை ஒரு நண்பனது நிலையென்று சைவ சித்தாந்தம் கூறுகிறது. அதைத் திருவள்ளுவர் நட்பியலில் கூறுகிறார். பல நாயன்மார்களும் ஆழ்வார்களும் நட்புரிமையுடன் இறைவனை வணங்கினர். ஞானமார்க்கத்திலே கடவுளைப் பற்றிய நினைவுதான் முக்கியமானது. இது பற்றி வள்ளுவர் துறவறவியலில் விரிவாகக் கூறுகிறார். அது பற்றி முன் கூறப்பட்டுள்ளது.

உபநிடதம் கூறிய ஆன்மா பற்றிய கோட்பாட்டை வேதாந்தம் வித்தியாசமாகச் சொல்கிறது. “ஒரே ஒரு பொருள் தான் உண்மை. அது பிரமமம். பிரமம் தானாகவும் ஒன்றாயும் இருப்பதே உண்மை. வேறாகவும் பலவாகவும் காணப்படுவது தோற்றம். பிரமமும் சீவனும் அடிப்படையில் ஒன்று” என்று கூறும் சங்கரர், பிரமம் கட்டுண்ட நிலையில் சீவாத்மா ஆகவும்,

கட்டுப்படாத நிலையில் பரமாத்மா ஆகவும் விளங்குகிறது, என்று கூறுகிறார்.

சங்காருக்குப் பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த திருவள்ளுவர் எல்லா உயிர்களுள்ளும் இறைவன் குடியிருப்பதாக நினைத்து ஒழுக்கமாக வாழும் மனிதர்களைத் தெய்வமாக்குகிறார். இதில் பெண்களும் அடங்குவர்.

அடுத்து சைவசித்தாந்தம் கடவுள், மனிதன் செய்யும் செயல்களால் விளையும் தீவினைகளை ஆத்மாக்களுடன் சேர்த்து வைப்பதைத் தொழிலாகக் கொண்டவர் என்று கூறுகிறது. ஆன்மா அறிவுள்ளது. வினை சடம்; அறிவற்றது. ஆன்மா அறிவுள்ளமையால் சடமான வினையை விலக்க நினைக்கும். அத்துடன் சடமாகிய வினை ஆன்மாவை அறிந்து அடைய மாட்டாது. அதை அறிந்து சேர்ப்பிப்பவர் இறைவன். இதைத்திருவள்ளுவர் இப்படிக்கூறுகிறார்.

619. தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

ஊழின் காரணத்தால் ஒருவனுக்குத் தெய்வத்தின் உதவி கிடைக்காது. அவன் தன் உடலை வருத்தி மேற்கொள்ளும் உழைப்பின் அளவுக்குப் பலன் கிடைக்கும்.

இங்கு சைவ சித்தாந்தத்தின் கடவுளின் வல்லமை கூறப்படுகிறது. நாயன்மார்களும் ஆழ்வார்களும் அசுரர்களும், அடியார்களும் முயற்சியுடன் மெய்வருத்தித்தான் பயன்பெற்றனர் என்பது நிறுவுப்பட்ட தொன்று.

உலக உற்பத்திபற்றி வேதமும், சைவசித்தாந்தமும் முரண்படுகின்றது. மண்ணால் பானையை வனையும் போது மண் பல்வேறு விதமான மாற்றங்களுக்குட்படுகிறது. அத்துடன் வனைந்த பின் அது உடைந்தாலோ இல்லை முழுமையாக

இருந்தாலோ அது மண்ணுடன் சேராது. அப்படியானால் படைக்கப்பட்ட பானையான உடலுடன் இறைவனுக்குத் தொடர்பில்லாமல் இருத்தல் வேண்டும். ஆனால் இறைவன் உலகத்துடன் இரண்டறக் கலந்துள்ளான். இதில் வேதமும் சைவ நித்தாந்தமும் வேறுபடுவது போலத் திருக்குறளும் வேறுபடுகிறது. பொதுவாகக் கடவுள், உலகம், ஆத்மா என்பதை விளக்க, ஒவ்வொரு மதமும் சிரமப்படுவதைக் காண முடிகிறது. ஒவ்வொரு மதங்களும் கடவுள், உலகம், ஆன்மா பற்றிக் கூறியவற்றை அவ்வவ் மதங்களுடன் திருக்குறளை ஒப்பு நோக்கும் போது விரிவாக ஆராயலாம். பானையைக் கொண்டு உலக்தைப் படைத்தவன் இருப்பதை உணரலாமென்றால் பானை செய்வதற்குரிய மூலப்பொருட்களைப் படைத்தவன் யார்? பானையை வனைந்த குயவனைப் படைத்தவன் யார்?

சைவசித்தாந்தம் மாயையின் துனையுடன், இறைவன் உலகைப் படைக்கிறான் என்று கூறுகிறது. இதன் மூலம் இறைவன் தனித்து எதையும் செய்ய முடியாதவன் என்ற நிலையை உண்டு பண்ணுகிறது. ஆனால் திருவள்ளுவர் வேத உபநிடதங்களையும் மற்றும் சமய தத்துவங்களையும் அலசி ஆராய்ந்து இறைவன், உயிர், உலகம் பற்றி மிகவும் அவதானமாகவும் தவறு ஏற்படாத வாறும் கூறியுள்ளார். ஆனால் அவற்றை உரையாசிரியர்களும், பொருள் கூறுவோரும், பிரசங்கிகளும் ஒவ்வொரு விதமாகத் தமது அறிவுக்கெட்டியபடி எடுத்துச் சொல்கின்றனர்.

உலகம் உள்ளது. அதில் ஒழுக்கமாக வாழ வேண்டும். உயிர் உள்ளது. அது வினைக்கேற்ப பிறப்பெடுக்கும். கடவுள் உள்ளார். அவர் உலகிற்கு முதலானவர். கடவுளை வணங்காதவன் படித்தாலும் பயன் இல்லை. கடவுளின் அடியை

நினைப்பவர்கள் உலகில் நெடுங்காலம் வாழ்வார்கள். விருப்பு வெறுப்பில்லாத கடவுளின் திருவடிகளை உறுதியாக நினைப்பவர்களுக்கு வாழ்வில் எத்தகைய துன்பமும் ஏற்படாது. அவர்களை நல்வினை தீவினை ஆகிய இரு வினைகளும் தொடர மாட்டாது. ஐம்பொறிகள் வழியாக வரும் ஆசைகளை நீக்கிய கடவுளின் புகழைப் போற்றுவோர் நிலைபெற்று வாழ்வார்கள். இவர்களைத் தவிர்ந்தோர் மனக்கவலையை மாற்ற மாட்டார்கள். அறக்கடலான கடவுளது திருவடிகளை நினைக்காதவர்களால் ஆசைகள் என்ற கடலைக் கடக்க முடியாது. பார்க்க முடியாத கண்கள், கேட்க முடியாத செவிகள் போலவே எண் குணங்களை உடைய இறைவனின் பாதங்களை வணங்காத தலையும் பயனற்றது. இறைவனின் திருவடிகளைச் சேர்ந்தவர்களே பிறவி என்னும் பெருங்கடலைக் கடப்பார்கள். அவ்வாறு செய்யாதோர் கடக்க மாட்டார்கள். வேத உபநிடதங்களும் சமயங்களும் உலகம் உயிர் இறைவன் என்ற பதத்தில் குழம்பிக் கொண்டிருந்த வேளையில் இரண்டாவது கருத்துக்கு இடமில்லாத வகையில் வள்ளுவர் இவற்றைப் பற்றி மிகவும் தெளிவாகக் கூறியுள்ளார்.

உயிர்கள் படைக்கப்பட்டதன் நோக்கம் இறைவனை அடைதல்; பிறப்பில்லாமல் போதல் என்று வள்ளுவர் அறுதியாகக் கூறுகிறார். அதற்கான வழிவகைகளையும் கூறுகிறார். வைதீக சமயங்கள் ஆணவம், கன்மம், மாயை, அவத்தைகள் என்று கூறுவனவெல்லாம் ஒழுக்கக் குறைபாடுகளே. பொறாமை, வஞ்சம், சூது, அவா, கள்ளருத்தல் போன்றவற்றால் தான் இறைவனை அடைய முடிவதில்லை என்று கூறும் வள்ளுவன் எப்படி இறைவனை அடையலாமென்று கூறுகிறார்.

அறஞ்செய்; அறநெறிகளுக்குட்பட்ட இல்வாழ்க்கை வாழ்; மனைவியோடு அன்பாக இரு; உயிர்களிடத்து அன்புடையவனாக இரு; விருந்தோம்பு; இனிய வார்த்தைகளைப் பேசு; செய் நன்றி மறக்காதே; நடுவு நிலையைப் பேணு; அடக்கமாக இரு; ஒழுக்கமாக இரு; பிறன் இல்விழையாதே; பொறுமையுடன் இரு; பொறாமைப்படாதே; புறம் கூறாதே; பயனில்லாதவற்றைப் பேசாதே; தீமை செய்ய அஞ்சு; ஒப்புர ஒழுகு; தானஞ் செய்; புகழுடன் வாழ முயல்; அருளுள்வனாக இரு; புலால் உண்ணாதே; ஒழுக்கமாக வாழ்; களவெடாதே; வாய்மையுடன் வாழ்; வெகுளாதே; பிறருக்குத் துன்பம் செய்யாதே; உயிர்களைக் கொல்லாதே; நிலையில்லாதவற்றை நிலையானதென்று நினைக்காதே; மெய்ப்பொருளை உணர்ந்து கொள்; அவா இல்லாமல் வாழ்.

மேற்கூறியபடி வாழ்ந்தால் தவஞ் செய்யலாமல் கடவுளை அடையலாம்.

மெய்ப்பொருள் அல்லாதவைகளை மெய்ப்பொருள் என்று தவறாக உணர்கின்ற மயக்க உணர்வால் சிறப்பில்லாத துன்பப் பிறவி உண்டாகும்.

அறியாமையாகிய இருளில் இருந்து நீங்கிய குற்றமற்ற மெய் உணர்வை உடையவர்களுக்கு, அம் மெய்யுணர்வு அறியாமையை நீக்கி இன்பத்தைக் கொடுக்கும்.

அறியாமையிலிருந்து நீங்கி மெய்யுணர்வு பெற்றவர்களுக்கு இவ்வுலகை விட, அடைய வேண்டிய மேலுலகம் மிகவும் அண்மையில் உள்ளதாகும்.

மெய்யுணர்வு இல்லாதவர்களுக்கு ஐம்புலன்களின் வாயிலாக வரும் ஐந்து வகை உணர்வுகளும் முழுமை பெற்றிருந்தாலும் அவற்றால் பயன் இல்லை.

எப்பொருள் எத்தன்மையதாய்த் தோன்றினாலும், அப்பொருளின் உண்மையான இயல்பை அறிந்து கொள்வதே மெய்மையான அறிவாகும்.

கற்க வேண்டியவற்றைக் கற்று, மெய்பொருளை உணர்ந்த வர்கள், மீண்டும் பிறவி எடுக்காத நிலையை அடைவர்.

ஒருவனுடைய உள்ளம் உண்மையான மெய்பொருளை ஆராய்ந்து உணர்ந்து கொண்டால், அவனுக்கு மீண்டும் பிறப்பென்பதே இல்லை.

பிறவித் துன்பத்திற்குக் காரணமான அறியாமையை நீக்கும், செம் பொருளைக் காண்பதே மெய்யுணர்வாகும்.

எல்லாப் பொருள்களுக்கும் சார்பான செம்பொருளை உணர்ந்து, பற்றற்று வாழ்ந்தால், சார்வதற்குரிய துன்பங்கள் திரும்ப வந்து அடையாது.

காமம், சினம், அறியாமை ஆகிய மூன்று பெருங் குற்றங்களையும் அடியோடு ஒழித்து விட்டால், துன்பங்கள் வராமல் கெடும்.

மெய் உணர்தல் என்ற அதிகாரத்தில் சைவ சித்தாந்தம் முழுவதையும் மிகவும் இலகுவாக விளங்கக் கூடியதாக வள்ளுவன் கூறியுள்ளான். வேத உபநிடங்கள், வைதீக சமயங்கள், அவைதீக சமயங்கள் பிரச்சினைப்படும் ஆன்மா, உலகம், இறைவன் என்ற பிரச்சினை இவ் அதிகாரத்தில் தீர்க்கப்படுகிறது. உபநிடதம் பிரமம் என்ற பதத்தைப் பாவிக்க வள்ளுவன் தெய்வம் என்ற பதத்தைப் பாவிக்கிறான்.

சில வரையறைக்குட்பட்டன. பஞ்சபூதங்கள்; நவக்கிரகங்கள், அறுசுவைகள் போன்றே எண்குணங்களும் வரையறைக் குட்பட்டது. இதற்கு மேல் குணங்கள் இல்லை.

அதனால் தான் வள்ளுவன் இறைவனை எண் குணத்தான் என்று கூறுகிறார்.

தன் வயத்தனாதல்; தூய உடம்பினனாதல்; இயற்கை உணர்வினன் ஆதல்; முற்றும் உணர்தல்; இயல்பாகவே பாசங்களில் இருந்து நீங்குதல்; பேரருள் உடைமை; முடிவு இல் ஆற்றல் உடைமை; வரம்பு இல் இன்பம் உடைமை; ஆகிய இவ் ஒப்பற்ற குணங்கள் எவையும் எந்த ஓர் உயிருக்கும் இல்லை. அது இறைவனுக்கு மட்டும் சொந்தமானது என்று கூறும் வள்ளுவன் நீத்தார் பெருமை என்ற அத்தியாயத்தில் முதலாவது அத்தியாயத்தில் கூறப்பட்ட கடவுளின் அடியை அடைந்தவர்கள் எல்லாப் பெருமையும் உள்ளவர்கள் என்று கூறுகிறான்.

41ஆவது குறள் முழுமையான வைதீகச் சமயத் தத்துவத்தைக் கூறுகிறது. இதை எந்த அவைதீகச் சமயங்களும் ஏற்கவில்லை.

42ஆவது குறளிலும் 43ஆவது குறளிலும் இறந்தவர் களுக்கும் (பிதிர்கள்) இல்வாழ்வான் தான் துணை என்கிறார். அவைதீக சமயங்களில் ஆன்மா பற்றிய தெளிவான விளக்கம் இல்லை. அத்துடன் ஆன்மா என்ற ஒன்று இருப்பதாகவும் இல்லை அப்படியானால் எப்படி இறந்தவர்களுக்கு உதவுவது. சைவ சித்தாந்தம் ஆன்மா எப்பொழுதும் எதையாவது ஒன்றைச் சார்ந்தது தான் நிற்கும் என்று கூறுகிறது. கன்ம பயனால் அடுத்தடுறுத்துப் பிறப்பெடுக்கும் உயிர் எந்த உடம்போடு இருந்தாலும் அதற்கு உதவி செய் யவேண்டும்; அதற்குத் துன்பஞ் செய்யக் கூடாது; மாணிக்க வாசகர் கூறுவது போல; “புல்லாகிப் பூடாயப் பூழுவாய் மரமாகிப் பல் மிருகமாகி......!”

உடலை விட்டுப் பிரிந்த உயிர்கள் மிருகங்களாகியும் இருக்கலாம். அதனால் அவற்றிற்குத் தொந்தரவுகள் செய்யக்கூடாது. அவற்றைக் கொன்று தின்னாதே; அவற்றின் மீது அன்பு செலுத்து என்று கருத்திதான் வள்ளுவன் குறள்களை ஆக்கியுள்ளான்.

நான்கு மார்க்கங்களைப் பற்றிச் சைவசித்தாந்தம் கூறுகிறது. ஞானமார்க்கத்தில் ஈஸ்வரனைப் பற்றிய ஞானமே முக்கியமானதாகும். இது சன்மார்க்கம் எனப்படும். இவ்வழிகளைப் பின்பற்றுவதன் மூலம் கிடைக்கும் பலன்களை சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்று கூறுவர். சாலோகம் என்பது இறைவன் இருக்கும் இடத்தை அடைதல். சாமீபம் என்பது இறைவனின் அண்மையை அடைதல்; சாரூபம் இறைவனது உருவத்தை அடைதல்; சாயுச்சியம் எனப்படுவது இறைவனுடன் இரண்டறக் கலத்தல். இதை வள்ளுவன் மிகவும் விரிவாகவும் தெளிவாகவும் கூறியுள்ளார்.

ஓர் இடத்தை அடையப் பலமார்க்கங்கள் உண்டு. அதே போல இறைவனை அடையவும் பல மார்க்கங்கள் உண்டு. வைத்தீக சமயங்கள் கோயில்களில் செய்யும் தொண்டுகளைச் சரிகை என்கிறது. வள்ளுவன் கோயில் தொண்டு செய்ய வேண்டாமென்று கூறுவில்லை. பெரியபுராணம் அன்னதானம் செய், தண்ணீர்ப்பந்தல் அமைத்துச் சிவனடியார்க்கும், ஏழைகளுக்கும் உணவும் நீரும் கொடு என்று கூறியுள்ளது.

ஏழைகள் என்று யாரும் இல்லை. எல்லோரும் சிவனடியார்கள் என்று பெரியபுராணம் கூறுகிறது. அங்கு வர்ண பேதம் பார்க்காது களிமண் பூசி வந்த வண்ணானும் சிவனடி யானாகக் கொள்ளப்பட்டான்.

கிரிகையை வள்ளுவன் கூறாவிட்டாலும் இறைவனை அடையஅவ்வழி பொருத்தமற்ற தென்றோ அல்லது அதைச் செய்யக் கூடாதென்றோ கூறவில்லை.

யோகநிலையைப்பற்றி வள்ளுவன் நட்பியல் என்ற இயலில் விரிவாகக் கூறியுள்ளான். மனிதன் இறைவனுடன் ஒன்றாகக் கலக்கும் சாயுச்சியம் பற்றி பல்வேறு அதிகாரங்களில் வள்ளுவன் கூறியுள்ளான். வள்ளுவன் மனிதனுக்குள் அதாவது நல்லதொரு ஆன்மாக்குள் தெய்வம் இருப்பதாகச் சொல்கிறான். இதன்படி பார்த்தால் நட்பியலில் கூறப்பட்ட யோக நிலை தென்படும்.

அடுத்து ஞானமார்க்கம் பற்றியும் வள்ளுவன் கூறியுள்ளான். அறத்துப்பாலில் பாயிரவியல் தொடங்கி துறவறவியல் வரை வரும் குறள்களில் பெரும் பான்மையானவை ஞானமார்க்கத்தை உபதேசிக்கின்றன. அத்துடன் யோக மார்க்கத்தைப் பற்றியும் பேசுகின்றன ஆன்மாக்களின் உயர்ந்த இலட்சியம் முத்தி அடைதல் ஆகும். சைவசித்தாந்தப்படி முத்தி துன்பம் அணுவளவும் இல்லாத பேரின்ப மயமான நிலை. இந்நிலையில் ஆத்மா இறைவனோடு இரண்டறக் கலந்த போதும் தன் இயல்பையும் இழக்காது. இதற்கு தாள் தலை என்ற இரு சொற்களின் புணர்ச்சியைச் சைவசித்தாந்தம் உதாரணமாகக் காட்டுகிறது. தாள் இறைவனையும் தலை ஆன்மாவையும் குறிக்கும். இவ்விரு சொற்களும் புணரும் போது தாடலையாகிறது. இதை இரு சொல்லாகவும் கொள்ள முடியாது. ஒரு சொல்லாகவும் கொள்ள முடியாது என்று ஆன்மா இறைவனோடு சேர்ந்திருக்கும் நிலையைச் சைவ சித்தாந்தம் விளக்குகிறது.

திருக்குறள் முத்தி பற்றிச் சொல்லும் போது இறைவனைப் பற்றிக் கூறி அவனை அடையும் வழி பற்றியும் கூறுகிறது. பின், பற்றுக்கள் அனைத்தையும் நீத்தவரது பெருமைகளைக் கூறுகிறது. இவர்கள் தேவர்களை விட உயர்ந்தவர்கள் என்றும், சொர்க்க வாழ்வை விட இன்பமான வாழ்வு இவர்களுக்குக் கிடைக்கும் என்றும் கூறுகிறது.

50. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

உலகத்தில் வாழ வேண்டிய அறநெறியில் நின்று வாழ்கின்றவன், வானுகலத்தில் உள்ள தெய்வ முறையில் வைத்து மதிக்கப்படுவான்.

இக்குறளின் மூலம் முத்தியைப் பற்றித் திருவள்ளுவர் சிறப்பாகவும் தெளிவாகவும் கூறுகிறார். எதையும் தெளிவாகச் சொல்லாமையினால் தான் பிரச்சினைகள் எழுந்து வாதப் பிரதி வாதங்கள் நடந்தன. ஆன்மா உள்ளது என்றால் உள்ளது என்று கூறுவதை விடுத்து உண்டு இல்லை. உண்டென்றும் கருதலாம்; இல்லையென்றும் கருதலாம் என்று கூறுவது சரியல்ல.

புத்தரிடம் பதின்னான்கு வினாக்கள் வினவப்பட்டன. அவற்றை நான்கு பிரிவுகளுள் அடக்கலாம். அவை பின்வருமாறு.

1) இந்த உலகம் நித்தியமா...? அனித்தியமா...? இரண்டுமா....? இரண்டும் அல்லவா......?
2) இந்த உலகம் எல்லை உடையதா? எல்லையற்றதா? இரண்டுமா....? இரண்டும் அல்லவா.....?
3) மரணத்திற்குப் பின்பும் ஆத்மா உண்டா...?இல்லையா..? இரண்டுமா...? இரண்டும் அல்லவா....?

4) உயிரும் உடலும் ஒன்றா...? வேறா.....?

இந்நான்கு பிரிவுகளும் பதின்னான்கு வினாவாகின்றன இவ்வினாக்களுக்கு புத்தர் விடைசொல்லவில்லை. மௌமான இருந்தார். அதனால் அவரது சீடர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தைக் கூறினர்.

இதே வகையில் தான் வேதத்திலும் இறைவன், ஆன்மா, உலகம் பற்றிப் பல்வேறு விதமாகச் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் திருக்குறள் கடவுளின் வரைவிலக்கணத்தைக் கூறுகிறது. ஆத்மாவின் நிலை பற்றித் திட்டவட்டமாகக் கூறுகிறது. உலகத்தைப் பற்றிய உண்மையைச் சந்தேகமின்றி கூறுகிறது.

முத்தி பற்றிக் கூறும் திருக்குறள், அதைப் பல்வேறு வடிவில், பல்வேறு விதமாக தெளிவாகக் கூறுகிறது.

முப்பொருளைக் கூறுவது ஆகமம். அதை முப்பாலாகக் கூறுவது திருக்குறள். அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு புருடாத்தங்களை அறம் பொருள் இன்பம் என்ற மூன்று பால்களுக்குள் திருக்குறள் அடக்குகிறது.

வீடு என்பது மனை; வாழ்விடம்; இல்லம் என்று கூறும் வள்ளுவர் வீட்.டைப் பற்றி விரிவாகக் கூறுகிறார். வீட்டில் இருந்தே அறஞ்செய்; வீட்டிலிருந்து அறவாழ்வு வாழ்ந்து பொருள் தேடு; வீட்டில் இருந்துதே சொர்க்கத்தையும் நரகத்தையும் அனுபவி. உனது செயல்களால் தான் சொர்க்கமும் நரகமும் உண்டாகும். சொர்க்கத்தைதயும் நரகத்தையும் இறைவன் கண்காணாத இடத்தில் வேறாகப் படைக்கவில்லை. உனது வீட்டிலேயே உன்னாலே அதை உருவாக்க முடியும் என்று வள்ளுவர் மிகவும் அழகாகக் கூறுகிறார். மனைக்குத் தலைவி; மனைவி; இல்லத்தை

ஆழ்பவள்; இல்லத்தரசி; இல்லாள்; வாழ்க்கைத் துணைவி என்றெல்லாம் வள்ளுவர் மனையாளைச் சிறப்பிக்கிறார்.

55. தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்எனப் பெய்யும் மழை.

பிற தெய்வங்களை வணங்காமல் காலையில் எழும்போதே கணவனை வணங்கி எழுகின்றவள், பெய் என்று சொன்னால் மழை பெய்யும்.

இது பரிமேழர் உரை. இதை ஒப்புக் கொள்ளா விட்டாலும் குறளின் கருத்தை ஆழ்ந்து சிந்தித்தல் வேண்டும்.

58. பெற்றால் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு.

கணவனைப் போற்றிக் கடமையைத் செய்யப் பெற்றால் மகளிர் பெரிய சிறப்பை உடைய மேலுலக வாழ்வைப் பெறுவர்

மேலுலக வாழ்வு சொர்க்கம். சொர்க்க வாழ்வுதான் முத்தி நிலை.

213. புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல்அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

பிறருக்கு உதவி செய்து வாழும் ஒப்புரவைப்போல நல்லெனவாகிய வேறு அறப்பகுதிகளைத் தேவருலகத்திலும் இவ்வுலகத்திலும் பெறுதல் இயலாது.

1103. தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு.

தாமரைக் கண்ணனின் தேவருலகம், தான் விரும்பும் காதலியின் மென்மையான தோள்களில் சாய்ந்து தூங்குவதை விட இனிதாகுமோ...?

1323. புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ நிலத்தொடு
நீர்இயைந் தன்னார் அகத்து?.

நிலத்தோடு நீர் பொருத்திக் கலந்தாற் போன்ற அன்புடைய காதலரிடத்தில் ஊடுவதை விட இன்பம் தருகின்ற தேவலோகம் இருக்கின்றதோ.....?

1101. கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றுஅறியும் ஐம்புலனும்
ஒண்தொடி கண்ணே உள.

கண்டும் கேட்டும் உண்டும் உற்றும் அறிகின்ற ஐந்து புலன்களாலாகிய இன்பங்களுள் ஒளி பொருந்திய வளையல் அணிந்த இவளிடத்தில் உள்ளன.

சொர்க்கம் என்பது தேவர் உலகில் வாழ்வது. மேற் சொன்ன குறள்களுள் யாவும் தேவரை விட இன்பத்தைப் பெறுகின்ற மக்களைப் பற்றியது. சமணமும் பௌத்தமும் பெண்களால் துன்பமும் நரகமும் வரும் என்று கூறுகிறது. வைதீக சமயங்கள் நதியை, பூமியை காணும் பொருட்களை யெல்லாம் பெண்ணாக உருவகித்து மகிழ்வன. அப்படியிருக்கப் பெண்களைத் தெய்வமாகவும் சொர்க்கமாகவும் கூறும் வள்ளுவன் எப்படி அவைதீக சமயத்தவனாக இருக்க முடியும்.

1121. பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வால்எயிறு ஊறிய நீர்.

மென்மையான மொழிகளைப் பேசுகின்ற இவளுடைய தூய பற்களின் ஊறிய நீர், பாலுடன் தேனைக் கலந்ததைப் போன்றதாகும்.

இப்படி வள்ளுவன் கூறுவதைக் சமணரும் பௌத்தரும் ஏற்பார்களா? 1101 ஆவது குறளில் கூறப்படுகின்ற ‘உண்டும்’ என்ற பதத்தின் அர்த்தமாக இக் குறள் உள்ளது. கிருமிகள் அழிந்து விடுமென்று மயிலிறகால் தாம் செல்லும் வழியைப் பெருக்கியும், கிருமிகளைகச் சுவாசிக்கக் கூடாது என வாயைக்

கட்டியும், தாம் இருக்குமிடத்தில் உயிர்கள் அழித்து விடும் என்பதற்காக உறியில் அமர்ந்திருக்கும் சமணரும் பாலோடு தேன் கலந்த நீரை ஏற்பார்களா...? சொர்க்கம் என்பது வீட்டில் உள்ளது. ஒழுக்கமான காதல் வாழ்விலும், அறத்திற்குட்பட்ட குடும்ப வாழ்விலும் சொர்க்கம் உள்ளதே தவிர கண்காணாத இடத்தில் இல்லை என்பது வள்ளுவனது வாக்கு. இதை மேற் சொன்ன குறள்கள் உறுதி செய்கின்றன.

உலகம் எப்படி உண்டானது? அது படைக்கப்பட்டதா..? உருவாக்கப்பட்டதா...? என்பதை வள்ளுவர் கூறவில்லை. இறைவன் உலகையும் உயிர்களையும் படைத்தான் என்பதே அவரது கொள்கை.

ஒன்றிலிருந்து இன்னொன்றை ஆக்க முடியுமே தவிர ஒன்றுமில்லாத சூனியத்திலிருந்து எதையும் ஆக்க முடியாது. மரத்தில் இருந்து மேசையைச் செய்ய முடியுமே தவிர, ஒன்றுமில்லாமல் மேசையைச் செய்ய முடியாது. இது முதலாவது நியதி. ஒரு பொருளில் இருந்து அதற்கு நேர்மாறான எதையும் உற்பத்தி செய்ய முடியாது என்பது இரண்டாவது நியதி. பாகல் விதையில் இருந்து பாகல் கொடியை உண்டாக்கலாமே தவிரச் சுரைக் கொடியை உண்டு பண்ண முடியாது.

இப்படி கூறுவதனால் மரம் எப்படி உண்டானது என்று விளக்கம் கூறுப்படவில்லை. மரத்தை உற்பத்தி செய்தால் தான் மேசையை உண்டாக்கலாம். மரமில்லாமல் எப்படி மேசை உருவாகும்? தாள் இல்லாமல் சித்திரம் வரையலாமா...?

முட்டையிலிருந்து தான் கோழி வந்தது. முட்டைக்குச் சேவலும் பேடும் வேண்டும். இந்தச் சேவலும் பேடும் முட்டையில் இருந்துதான் உருவானது. அப்படியாயின்

சேவலையும் பேட்டையும் உருவாக்கியவர் யார்...? இதற்கு எந்த மதத்தவரும் பதில் கூறவில்லை.

சமணமும் பௌத்தமும் கடவுளையும் ஆன்மாவையும் உண்டென்று ஏற்றுக்கொள்வதில்லை. உலகம், உயிர், கன்மம் யாவும் அணுவின் செயற்கை என்று சமணம் கூறுகின்றது.

271. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்.

வஞ்ச மனம் உடையவனுடைய பொய் ஒழுக்கத்தைக் கண்டு அவனுடைய உடலில் கலந்து நிற்கும் ஐம்பூதங்களும் தம்முள் சிரிக்கும் என்று திருக்குறள் கூறுகிறது. சைவசித்தாந்தம் ஐம்பூதங்களால் ஆனது உடல் என்கிறது.

சமணம் உலகத்தைப் படைக்க கடவுள் தேவையில்லை என்று கூறுகிறது. அதே போல பௌத்தமும் கடவுளை ஏற்றுக் கொள்வதில்லை. ஆனால் இந்து சமயம் வேதத்தை ஏற்பதால் வேதத்தில் கூறப்பட்ட கடவுள் கொள்கையை ஏற்பதுடன் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு கடவுள் இருப்பதாக கூறுகிறது.

நீருக்கு வருணன்; நெருப்புக்கு அக்கினி; காற்றுக்கு வாயு; கல்விக்குச் சரஸ்வதி; செல்வத்திற்குத் திருமகள்; வீரத்திற்குத் துர்க்கை; காதலுக்கு ரதி; மன்மதன், காவலுக்கு வைரவர், தரித்திரத்திற்கு மூதேவி இதைக் குறளும் ஏற்கிறது. திருமகள் செல்வத்திற்குரிய தெய்வமென 84, 167, 617, 927, 924 என்ற குறள்களிலும், தரித்திரத்திற்குரியவள் மூதேவியென 167, 936ஆவது குறள்களும் கூறுகின்றன. கடவுளை ஏற்காத புறச் சமயங்கள் திருமகளையும் மூதேவியையும் ஏற்குமா?

தைத்திரிய உபநிடதத்தின் சீடவல்லி என்ற பகுதி இப்படிக் கூறுகிறது; “மனிதன் என்பவன் ஐம்பூதங்களின்

கலவை. அப்பாத்திரம் அழியக் கூடியது. இதை வள்ளுவரின் 271ஆவது குறள் கூறுகிறது''.

''பிரமத்தை எவன் ஒருவன் உணர்கின்றானோ அவனால்தான் ஆனந்தத்தை அடைய முடியும்'' என்றும் ஆனந்தவல்லி கூறுகிறது. இதைத் திருவள்ளுவர் 7ஆவது குறளில் கூறுகிறார்.

வேதாகாலத்தில் மண், நீர், ஒளி, காற்று ஆகியவற்றையும் கடவுளாக மக்கள் வணங்கினர். இவற்றுள் மண்ணைப் பெண்ணின் வடிவத்திலேயே வேதகால பாடலாசிரியர் பாடுகிறார். இந்தப் பெண் தெய்வத்திற்கு நிர்ரித்ரி என்று பெயர். இவள் எங்கும் விரிந்திருப்பவள். பச்சை நிற ஆடையை உடுத்திருப்பவள்.

''கலப்பையைத் தயாரித்து அவற்றின் நுனியை கூர்மையான இரும்பால் மூடுங்கள். அவள் எமது தாய். உழுது தானியங்களைத் தூவுங்கள். அவள் பலமடங்காகத் தருவாள். வர்ணன் அவளைக் குளிரப் பண்ணுவான். சூரியன் நிர்ரித்ரியைச் சூல் கொள்ள உதவுவான்'' என்று சுக்கில யசுர்வேதம் கூறுகின்றது.

1039. செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்.

நிலத்துக்குரியவன் தினமும் சென்று நிலத்தைப் பார்த்து வேண்டியவற்றைச் செய்யாதிருந்தால், அந்நிலம் அவனது மனைவியைப் போல அவனை வெறுத்து ஒதுக்கி விடும்.

1040. இலம்என்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலம் என்னும் நல்லாள் நகும்.

தன்னிடம் ஒரு பொருளும் இல்லை என்று எண்ணி வறுமையால் சோம்பி இருப்பவனைக் கண்டு, அள்ளிக் கொடுப்பவளான நிலம் என்ற நல்லவள் அவனைப் பார்த்துச் சிரிப்பாள்.

உயிர்களுக்கு உண்ண உணவுப் பொருட்களை விளைவித்துக் கொடுப்பதோடு, பருகுபவர்களுக்கு ஓர் உணவாகவும் இருப்பது மழையாகும்.

தீய சொற்களைத் தவறியும் தம் வாயால் ஒழுக்கமுடையவர்கள் சொல்லமாட்டார்கள்.

உலகத்தவரோடு இணைந்து நடக்கும் முறையைத் தெரிந்து கொள்ளாதவர்கள், பல்வேறு வகையான நூல்களைக் கற்றிருந்த போதிலும் அறிவில்லாதவர் ஆவர்.

நான்காவது வேதமான அதர்வத வேதத்தின் உபநிடதமான முண்டக உபநிடதம் அறிவில் உயர்ந்த அறிவு, தாழ்ந்த அறிவு என இருவகை அறிவும் உண்டு. கல்வியால் வரும் அறிவு தாழ்ந்தது என்றும் ஒழுக்கத்தால் வரும் அறிவே உயர்ந்தது என்றும் கூறுகிறது. நான்கு வேதங்களையும் படிப்பதால் உண்டாகும் அறிவிலும் பார்க்க ஒழுக்கத்தால் வரும் அறிவு உயர்ந்தது என்று கூறுகிறது.

ஒழுக்கம் மேன்மையைத் தருவதால், ஒழுக்கத்தை உயிரிலும் மேலானதாகப் போற்ற வேண்டும் என்கிறது குறள்.

ஒழுக்கத்தில் இருந்து தான் ஒருவனது குலத்தைத் தெரிந்து கொள்ளலாம். ஒழுக்கம் உள்ளவனாக இருக்கப் பிறவியும், கல்வியும் தடையாக இராது. நல்லதைச் செய்பவன்தான் பண்பாளன். நல்லதைச் சொல்பவன் பண்பாளனாகி விட முடியாது. இதன் மூலம் வேதம் கற்காமல்

சடங்குகள் செய்யாமல் பிரமத்தை அடைய முடியுமென்று முண்டக உபநிடதம் கூறுகிறது. பிரமத்தை ஆத்மா அடையக் கிரியைகள் படகாகப் பயன்படும் என்ற மற்றய வேதங்களின் கூற்றையும் முண்டக உபநிடதம் கண்டிக்கிறது. அப்படிச் சொல்பவர்கள் விவேகமில்லாதவர்கள் என்றும் அவர்கள் மீண்டும் மீண்டும் பிறந்து மரணம் அடைவார்கள் என்றும் கூறுகிறது.

நதிகள் யாவும் கடலில் கலப்பதன் மூலம் தமது பெயரை இழப்பது போல, ஆத்மாக்களும் பிரமத்துடன் கலப்பதால் தமது பெயரை இழக்கின்றன என்றும் முண்டகம் கூறுகிறது.

மாண்டுக்கிய உபநிடதம் தான் முதன்முதலாக பிரமம் சிவன் என்று கூறி அவரின் இயல்புகளையும் கூறுகிறது. அவ்வியல்புகள் பெரும்பாலும் திருக்குறளில் கடவுள் வாழ்த்துப் பகுதியில் கூறப்பட்டவை. அதர்வண வேதம், ருக்வேதம் தோன்றி மூவாயிரம் வருடங்களுக்குப் பின் தோன்றியது. அதைப் படித்து விட்டுத் தான் வள்ளுவன் கிரியைகளையும் கல்வியையும் மேலாக எண்ணாது ஒழுக்கத்தை உயிராகப் போற்ற வேண்டும் என்று நினைத்துத் திருக்குறளை இயற்றினார்.

சைவசித்தாந்தப்படி ஆன்மா ஒருபோதும் தனித்து இராது. உடலை அல்லது இறைவனை அது சார்ந்திருக்கும். அப்படியாயின் ஆன்மா எப்படிச் சொர்க்கத்தை அல்லது நரகத்தை அடைய முடியும். கன்ம பயனுக்கு ஏற்றபடி இன்பதுன்பங்களை எப்படி அனுபவிக்க முடியும்? அதர்வதன வேதத்தைப் படித்த திருவள்ளுவர் அவ்வேதத்தில் உள்ள சிவனின் குணங்களைக் கடவுள் வாழ்த்தாக வாழ்த்தி விட்டு, இறைவனை அடைத்த ஆன்மாக்கள் இன்புற்றிருக்க மற்றவை

பூவுலகில் பிறந்து வாழும் போது சொர்க்கத்தையும் நரகத்தையும் அனுபவிக்க வேண்டுமென்று உணர்ந்தமையால் தான் அவர் அறம் பொருள் இன்பத்துள் வீட்டையும் அடக்கினார். ஆன்மா இன்பத்தையும் துன்பத்தையும் (சொர்க்கம், நரகம்) இன்னொரு இடத்தில் அனுபவிக்க முடியாது என்பதை வள்ளுவர் திட்டவட்டமாக உணர்ந்தமையால் தான் குறள்பாக்களில் ஆன்மாக்களின் செயலையும் அதனால் வரும் இன்ப துன்பங்களையும் கூறியுள்ளார்.

இல்வாழ்வானுக்குக் குழந்தை அவசியம். அக்குழந்தை அறிவுமிக்கதாகவும் பலம்பொருந்திய தாகவும் இருக்க வேண்டுமென்று இறைவனைக் கோரும் பாடல்கள் அதர்வண வேதத்தில் உள்ளன. ஆண் பிள்ளைகளையே வேதகால மக்கள் விரும்பினர். அதைப் பின்பற்றி வள்ளுவர்,

மனைவியின் நற்பண்புகளே இல்வாழ்க்கைக்கு மங்கலம் என்றும் அதன் பேறாக நல்ல மக்களைப் பெறுதலே நல்லணிகலம் என்றும் பெரியோர் கூறுவர்.

தந்தை மகனுக்குச் செய்யும் நல்லுதவி, கற்றவர் மத்தியில் தன் மகன் முந்தியிருக்கும்படியாக அவனை கல்வியில் மேன்மை அடையச் செய்தலாகும்.

தன்மகனை நற்பண்புள்ளவன் எனப்பிறர் சொல்லக் கேள்வியுற்ற தாய், தான் அவனைப் பெற்ற காலத்தில் அடைந்த மகிழ்ச்சியை விடப் பெரிதும் மகிழ்வாள்.

மகன் தன் தந்தைக்குச் செய்யும் கைம்மாறு, இவனுடைய தந்தை இவனை மகனாகப் பெற என்ன தவம் செய்தாரோ என்று பிறர் புகழ்ந்து சொல்லும் சொல்லாகும்.

பொறாமை கொள்வதையும் கோபம் கொள்வதையும் நீக்கும்படி கடவுளைக் கோரும்பாடல்களும் உள்ளன.

பொறாமைப்படக் கூடாது. கோபம் கொள்ளல் ஆகாது என வள்ளுவர் கூறுகிறார்.

ஒருவன் தனது நெஞ்சில் பொறாமை இல்லாமல் வாழும் இயல்பை ஒழுக்க நெறியாகக் கொள்ளல் வேண்டும்.

கடுங்கோபம் கொள்பவர் இறந்தவனைப் போன்றவர். கோபத்தை அடியோடு விட்டவர் துறவிக்கு ஒப்பானவர்.

கௌசீக உபநிடதம் ஒழுக்கக் குறைவாக நடக்கும் ஆன்மா தண்டனை பெற மீண்டும் மீண்டும் உடல்களை எடுக்கிறது என்கிறது.

உபநிடதங்கள், வேதங்கள், சமயங்கள் கூறுபவற்றை யெல்லாம் ஆராய்ந்த பின்பு வள்ளுவர் உண்மையான நிலையை வரையறை செய்து தனது குறட்பாக்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். இதில் குறைகாணவோ, சந்தேகப்படவோ முடியாது. எல்லாக் குறள்களும் வாய்ப்புப் பார்த்தபின்பே வெளியிடப்பட்டுள்ளன. இறைவன் சூன்யத்தில் இருந்து உலகைப் படைத்தான் என்றும், பிரமத்தில் இருந்து இச்சட உலகு தோன்றியதென்றும், பிரகிருதியில் இருந்து உலகம் தோன்றியது என்றும், மாயையில் இருந்து உலகம் தோன்றியது என்றும், பஞ்ச பூதங்களில் இருந்து உலகம் தோன்றியதென்றும் ஒவ்வொரு சமயத்தினரும் கூறுவர்.

திருவள்ளுவர் உலகம் தோன்றியதைாப் பற்றிக் கூறாது உயிரைப் பற்றியும் இறைவனைப் பற்றியும் உலகைப் பற்றியும் கூறியுள்ளார். அவர் கூறியதிலிருந்து இறைவன் தான் உலகைத் தோன்றுவித்தான் என்ற உண்மை புலனாகிறது.

சகல வல்லமையும் கொண்ட ஆண்டவன் தனது சக்தியால் உலகைப் படைத்துள்ளான் என்பதே வள்ளுவனது

வாக்கு. வல்லமை உள்ள ஆண்டவனுக்குச் செயற்பட எந்த உதவியும் தேவையில்லை.

வள்ளுவனது உண்மையான தத்துவம் செயற்பட்டால் பலர் பாதிப்புக்குள்ளாவர். அதனால் எல்லோருமாகச் சேர்ந்து வைதீக சமயத்தவனான வள்ளுவனை விலக்கி வைத்தனர்.

கன்மம் என்றால் செயல். செயல்மட்டுமன்றி எண்ணம், சொல் ஆகியவனவும் கன்மத்துள் அடங்கும். எல்லாச் செயல்களுக்கும் பலன் உண்டு. அப்பலன்கள் செய்பவனைச் சேரும். சில பலன்கள் உடனேயே சேரும்; சில செயல்களின் பலன்கள் காலம் சென்று சேரும். இந்த உண்மையை ஒப்புக் கொள்ளாதவர்கள் இல்லை.

ஒருவன் ஒரு பிறப்பில் செய்யும் செயல்களின் பலன்களை அவன் அப்பிறப்பில் அனுபவிக்க முடியாமல் போகலாம். அந்தப்பலன்களை அனுபவிப்பதற்காக தான் பல பிறவிகள் எடுக்கிறான். இதை வைதீக சமயங்கள் முக்கியப்படுத்திக் கூறுகின்றன. இதை வள்ளுவர் வலியுறுத்திக் கூறுகிறார்.

538. புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யாது
இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்.

சான்றோர் புகழ்ந்து சொல்லிய செயல்களை போற்றிச் செய்தல் வேண்டும்; அவ்வாறு செய்யாமல் மறந்து சோர்ந்தவர்களுக்கு ஏழு பிறப்பிலும் நன்மை இல்லை.

835. ஒருமைச் செயல்ஆற்றும் பேதை எழுமையும்
தான்புக்கு அழுந்தும் அளறு.

ஏழு பிறப்பிலும் தான் புகுந்து அழுந்துவதற்குரிய நரகத் துன்பத்தை பேதை தன் ஒரு பிறப்பில் செய்து கொள்ள வல்லவனாவான்.

கருத்து வேறுபாடான எந்த விடயத்தையும் வள்ளுவர் கூறவில்லை. அவர் சகல விஷயங்களையும் நன்கு ஆராய்ந்து வாய்ப்புப் பார்த்து முக்காலத்திற்குப் பொருந்துமாறு படைத் துள்ளார். அவர் பொருந்தாதவற்றை நீக்கி பொருந்துபவற்றையே ஆதாரங் களுடன் எழுதியுள்ளார்.

கிரியைகள் இல்லாத திருக்குறளைப் புறக்கணிக்க வேண்டும், அதைத் ஒடுக்க வேண்டும் என்று நினைத்தவர்களின் பக்கமே தற்போதைய சமூகமும் சார்ந்துள்ளது வேதனைக்குரியது. கடவுள் வாழ்த்து என்ற அதிகாரத்தைப் படித்த பின்பும் திருக்குறள் அவைதீக சமய நூல் என்று கூறுவோரை நாம் எப்படித் திருத்துவது?

வேத உபநிடதங்கள் கூறுவனவற்றில் தெளிவு காணப்படவில்லை. அத்துடன் ஒன்றுக்கொன்று முரணான பல விஷயங்களும் அங்கு காணப்படுகின்றன. முருண்பாடுகளை நீக்கி வேத உபநிடதங்கள் கூறுவுது இதுதான் என்று வரையறை செய்யப் பலர் முயன்றனர். எனினும் அவர்களால் அவற்றைத் தெளிவுபடுத்த முடியவில்லை. வேத உபநிடதங் களின் கருத்துப்படி மூலப்பொருள் ஒன்றா, இரண்டா என்று வரையறையாகக் கூற யாராலும் முடியவில்லை. ஒவ்வொருவரும் கூறியது தெளிவுக்குப் பதிலாகக் குழப்பத்தையே உண்டு பண்ணியது. ஒவ்வொருவரும் தமது அறிவுக் கெட்டியவாறு விளக்கம் கூறிய போதும் அவை குழப்பத்தையே உண்டாக்கின.

வேத உபநிடதங்கள் எதையும் வரையறுத்துக் கூறவில்லை. உலகம், உயிர், கடவுள் என்ற பதங்கள் பற்றி பலவாறு வரையறையின்றிக் கூறுகின்றன.

சங்கரரர், இராமானுஞர், மத்துவர் போன்றோரும் ஆன்மா உலகம் இறைவன் பற்றி வரையறுத்துக் கூறவில்லை. உபநிடதத்தில் உள்ள இடர்பாடுகள் வேதாந்தத்திலும் மிகுந்து காணப்படுகிறது. வேத உபநிடங்கள் ஆன்மா உலகம் பிரமம் என்பவற்றில் குழம்பியது போல வேதாந்திகளும் குழப்புகின்றனர். பிரமத்திற்குரிய இலட்சணங்களையோ, ஆன்மாக்குரிய இலட்சணங்களையோ, உலகத்திற்குரிய இலட் சணங்களையோ அவர்கள் புரியும் படியாகக் கூறவில்லை. அத்துடன் நம்புபம்படியாகவும் கூறுவில்லை. வேத காலத்தில் உள்ளவர்கள் யார் பெரிய கடவுள் என்று சந்தேகித்ததைப் போல இவர்களும் சந்தேகிக்கிறார்கள்.

வள்ளுவர் ஆன்மா, உலகம், தெய்வம் என்பவற்றையும், கன்மம், மறுபிறப்பு என்பவற்றையும், சொர்க்கம், நரகம் என்பவற்றையும் வரையறை செய்கிறார். உலகம் எப்படியானதென்றும், கடவுள் எப்படியானவர் என்றும் ஆன்மா எப்படிப்பட்டதென்றும் சந்தேகமின்றி நிறுவுகிறார். கடவுளின் செயலில் அவர் நம்பிக்கையீனம் கொள்ளவில்லை. உயிர் இல்லை என்று கூறுவில்லை. பிரமம் பந்திக்கப்படுவதால் ஆன்மாவாகின்றது என்றோ, மாயையால் தான் உலகம் உருவாகிறதென்றோ கூறவில்லை. அவர் வைதீக சமய ரீதியாகவும், விஞ்ஞான ரீதியாகவும், உலகம், உயிர், இறைவன் என்பவற்றிற்கு வரைவிலக்கணம் கூறுகிறார்.

கனவோ, கற்பனை காணாது நிஜத்தைக் கூறுகிறார். பொதுவாக இன்பத்துப்பாலை யாரும் கண்டு கொள்வதில்லை, கணக்கெடுப்பதும் இல்லை. அது வைதீக சமயம் செய்த பாவம். அறம், பொருள் போல இன்பத்தையும், வீட்டையும் வைதீகர் சமமாகக் கொள்ள வேண்டும். காமம் ஒரு

யோகமெனப் பல பெரியவர்கள் கூறியுள்ளனர். சிவன், முருகன், விநாயகன், கண்ணன் போன்ற கடவுளர்க்கு ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியர் உண்டு என்று சொல்லும் போது அதை மறைக்க ஏன் முயல்வான்.

புராண இதிகாசங்களில் பெண்களின் தன்மைகள் கூறப்படுகின்றன. சிவன் அர்த்தநாரீசராக இருப்பதில் இருந்து ஆணும் பெண்ணும் சமம்; ஆணில்லாவிட்டால் பெண்ணில்லை; பெண்ணில்லாவிட்டால் ஆணில்லை என்ற நிலை உணர்த்தப்படுகிறது. அவைதீக சமயங்கள் பெண்களை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. ஆனால் வைதீக சமயங்கள் பெண்களைத் தெய்வமாக மதிக்கின்றன. வள்ளுவரும் பெண்களைத் தெய்வமாக மதிக்கிறார். அப்படியிருக்க வள்ளுவர் எப்படி அவைதீகராக இருக்க முடியும்.

46. அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின்
போஒய்ப் பெறுவது எவன்?

ஒருவன் அறநெறிகளுக்குட்பட்டு இல்வாழ்வு வாழ்வதே சிறப்பானதாகும். அதை விடுத்து துறவு வாழ்வினை மேற்கொள்வதால் எந்தப் பயனையும் அவன் அடையமாட்டான்.

47. இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்.
முயல்வாருள் எல்லாம் தலை.

அறநெறி வழிநின்று இல்வாழ்வை மேற்கொள்பவன் பிற முயற்சிகளில் ஈடுபட்டோர் யாவரிலும் சிறந்தவன்.

48. ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா; இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து.

பிறரையும் அறவழியில் வாழச்செய்து தானும் அறவழியில் இருந்து விலகாது வாழ்பவனது இல்வாழ்க்கை

தவம் செய்வாரைவிட மிக்க வலிமை உடைய வாழ்க்கையாகும்.

50. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

அறநெறிக்குட்பட்டு இவ்வுலகில் வாழும் இல்வாழ்வான் வானுலகில் வாழும் தெய்வங்களைப் போல் போற்றப்படுவான்.

53. இல்லதென் இல்லவள் மாண்பானால்; உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை?

நற்குணங்களையுடைய இல்லாள் வாழும் வீட்டில் இல்லாதவையென எதுவும் இருக்கமாட்டாது. நற்குணங்கள் அவளிடம் இல்லையாயின் அவ்வீட்டில் எதுவும் இராது.

54. பெண்ணின் பெருத்தக்க யாவுள கற்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின்?

கற்பு என்னும் உறுதி இல்லாளிடத்து இருக்குமேயானால், அவளைவிடப் பெருஞ்செல்வம் கணவனுக்கு வேறு இல்லை.

56. தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

தன்னையும் காத்து தனது கணவனின் நலன்களையும் பேணிக்காத்து அன்பாகப் பேசி வாழ்கின்றவளே பெண்.

59. புகழ்புரிந்த இல்இலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை.

கணவனது புகழைக் காக்க விரும்பும் மனைவி இல்லாதவர்களுக்கு, இகழ்ந்து பேசும் பகைவர் முன் காளை போல் நடக்கும் கம்பீரநடை இல்லை.

பெண்ணைப் போகப் பொருளாகக் கருதாது யோகப் பொருளாகவே வள்ளுவர் நினைக்கிறார்.

1089. பிணைஏர் மடநோக்கும் நாணும் உடையாட்கு
அணிஎவனோ ஏதில தந்து.

1082. நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்குஅணங்கு
தானைக்கொண் டன்னது உடைத்து.

1085. கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கம்இம் மூன்றும் உடைத்து.

இக்குறள்களில் பெண்ணை வள்ளுவர் தெய்வ பெண்ணோ..? மயிலோ..? கனமாக குழை அணிந்த மனிதப் பெண்ணோ?'' என்றும், அணங்கு என்றும் எமனோ? பெண் மானோ? என்றும் கூறுகிறார்.

கண்டும் கேட்டும் உண்டும் முகர்ந்தும் உற்றும் பெறும் இன்பம் பெண்ணில் உள்ளது என்றும், தாமரைக் கண்ணனுடைய உலகம், காதலியின் மென்தோளில் துயிலும் இன்பத்திற்கு இணையாகுமா என்றும் இவளுடைய தோள்கள் அமிர்தத்தால் செய்யப்பட்டித்தல் வேண்டும் என்று கூறுகிறார்.

விண்மீன்கள் திகைக்கின்றன என்றும், திங்களிடம் களங்கமுண்டு இவளின் முகத்தில் களங்கம் இல்லை என்றும், திங்களே இவளின் முகத்தைப் போல ஒளி வீச உன்னால் முடியாது என்றும், திங்களே இவளுடைய முகத்தைத் ஒத்திருக்க விரும்பினால் நீ பலரும் காணும்படி தோன்றாதே என்றும் கூறுகிறார்.

இதைச் சமணமும் பௌத்தமும் கூறுமா..? இல்லை ஏற்குமா..?

தாம் விரும்பும் காதலரால் அவனது காதலி விரும்பப்படாவிட்டால் உலகத்தாரால் விரும்பப்படும் நிலையில்

உள்ளவரும் நல்வினை பொருந்தியவர் அல்லர். காரைக்கால் அம்மையாரின் வரலாற்றை இக்குறள் நினைவுபடுத்துகிறது.

1280. பெண்ணினால் பெண்மை உடைத்துஎன்ப கண்ணினால்
காமநோய் சொல்லி இரவு.

கண்களால் காம நோயைத் தெரிவித்துப் பிரியாமல் இருக்குமாறு இரத்தல், பெண் தன்மைக்கு மேலும் பெண் தன்மை உடையது. இதைச் சமண பௌத்தம் ஏற்காது.

1282. தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும்
காமம் நிறைய வரின்.

காமம் பனையளவாக நிறைய வரும்போது காதலரோடு தினையளவாகச் சிறிதேனும் ஊடல் கொள்ளாமல் இருத்தல் வேண்டும். இதைச் சமணமும் பௌத்தமும் ஏற்காது.

1311. பெண்இயலார் எல்லாரும் கண்ணின் பொதுஉண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு.

பரத்தமை உடையாய்! பெண்தன்மை உடையவர் எல்லாரும் தத்தம் கண்களால் பொதுப் பொருளாகக் கொண்டு நுகர்கின்றனர். ஆகையால் உன்மார்பைப் பொருந்தேன். இதைச் சமணமும் பௌத்தமும் ஏற்குமா...?

நிலத்தோடு நீர்பொருந்திக் கலந்தாற் போன்ற அன்புடைய காதலரிடத்தில் ஊடுவதை விட இன்பந்தருகின்ற தேவருலகம் இருக்கின்றதோ..?

நெற்றி வியர்க்கும்படியாக கூடுவதில் உளதாகும் இனிமை, ஊடியிலிருந்து உணர்வதன் பயனாக இனியும் பெறுவோமா...?

காமத்திற்கு இன்பம்தருவது ஊடுதல், ஊடல் முடிந்தபின் கூடித்தழுவப் பெற்றால் அந்த ஊடலும் இன்பமாகும்.

பெண்ணைப் பார்த்தாலே துன்பம்; துன்பத்தின் விளைவிடம் பெண் என்று கூறும் சமணமும் பௌத்தமும் இவற்றை ஏற்காது. வைதீக சமயங்கள் இதை ஏற்கின்றன. சிவன் பார்வதியைப் பிரிந்ததால் பெற்ற துயரமும், முருகன் வள்ளியை அடையப்பட்ட சிரமமும் கண்ணானது லீலைகளும் திருவள்ளுவர் கூறியதை மெய்பிக்கின்றன.

வேத உபநிடதங்களை விளங்கிக் கொள்வதில் உள்ள இடர்பாடுகள் காரணமாகவே சமயங்கள் தமக்குள்ளும் பிற சமயங்களுடனும் வேறுபாடு கொண்டன. பொதுவாக வேத உபநிடதங்களை ஏற்றுக் கொள்ளும் வைதீக சமயங்களுள்ளும் கருத்து முரண்பாடுகள் பல உண்டு. வேத உபநிடதங்களை ஏற்காத அவைதீக சமயங்கள் வேத உபநிடதங்களைக் கண்டித்தும் நிந்தித்தும் தமது சமய உண்மைகளைச் சொன்னார்களே தவிர அவற்றின் உட்பொருளை அவர்களும் விளங்கிக் கொள்ளவில்லை. பிரச்சினைகளுக்குட்பட்டு விளங்கிக் கொள்ள முடியாது பல அறிஞர்கள் கஷ்டப்பட்ட வேத உபநிடதங்களைப் பற்றி திருவள்ளுவர் எதையும் கூறவில்லை. வைதீக, அவைதீக சமயங்கள் வரையரை கூறச் சிரமப்பட்ட கடவுள் உலகம் ஆன்மா என்பவற்றைப் பற்றி மிகவும் தெளிவாகவும் உறுதியாகவும் இரண்டாவது கருத்திற்கு இடமளிக்காமலும் வள்ளுவர் குறள்களில் கூறியுள்ளார். இரண்டாயிரம் வருடங்களாக அறிஞர்கள் தாமும் குழம்பி மக்களையும் குழம்பியதை நன்கு உணர்த்த வள்ளுவர் தான் அந்தக் காரியத்தைச் செய்யவில்லை.

புத்தர் சைவ சமயத்தில் பிறந்த அரசகுமார். அதனால் அவர் தனது இளமைக் காலத்தில் சைவசமய உண்மைகளக்

கற்றிருப்பார். அரசகுமாரர்களுக்கு வேத உபநிடதங்கள் அரச குருவால் பிரமச்சாரியப் பருவத்தில் கற்பிக்கப்படுவதுண்டு. அதனால் அவர் உபநிடக் கருத்தை ஏற்காவிட்டாலும் எதிர்க்கவில்லை. பொதுவாக உபநிடதம் கூறும் பிரமம், ஆன்மா இரண்டிற்கும் வைதீக சமயங்களிலேயே கருத்து முரண்பாடுகள் உண்டு. ஆனால் ஒழுக்கக் கருத்துக்களில் எந்த முரண்பாடும் இல்லை.

அடுத்துச் சமண சமயத்தைப் பற்றி ஆராய்ந்தால், கருத்து வாதத்தை ஆதரித்து, உலகின் தோற்றத்தைத்திற்கு மூலப்பொருள் ஒன்று என்று கொள்வோர் ஒருபிரிவினர். மெய்மைவாதத்தை ஆதரித்து உலகத் தோற்றத்திற்கு மூலப்பொருள் பல எனக் கொள்வோர் ஒரு பிரிவினர். இவர்களுள் உலகத் தோற்றத்திற்கு மூலப் பொருள் பலவெனக் கொள்வோர் சமணர்.

வள்ளுவர் தனது முதலாவது குறளில் உலகம் கடவுளை அடிப்படையாகக் கொண்டது என்று கூறுகிறார். இதிலிருந்து உலகத்தைத் தோற்றியவர் கடவுள் என்பது தெரிகிறது. அதற்கு மேல் அவர் எதையும் கூறவில்லை. இது சமணக் கருத்திற்குப் பொருந்தாது. சமணரது கொள்கைப்படி உலகம் சீவன், அசீவன் என்ற இரு பிரிவுகளில் அடங்குகிறது. சீவன் என்பது உயிர், அசீவன் என்பது உடலும் ஏனைய சடப்பொருள்களும். இவை இரண்டும் நித்தியமா, அனித்தியமா என கூறுவதில் சமணர்கள் பல இடர்பாடுகளுக்குட்படுகின்றனர்.

வேதாந்திகள் ஆத்மா நித்தியமானது என்கின்றனர்; அசீவன் நிலையானது, சீவன் நிலையற்றது என்கிறது உலகாயுதம். சீவன், அசீவன் என்ற இரண்டும் அழிவற்றவை;

இரண்டும் நித்தியமானவை என்கின்றனர் சமணர். அத்துடன் ஆத்மாக்கள் பல என்றும் சமணர் கொள்வர்.

உயிருக்குச் சமணர் பருமனும் அளவும் குறிக்கின்றர். உயிர் எந்த உடலை உறைவிடமாகக் கொள்கிறதோ அந்த உடலின் பருமனுக்கேற்பத் தன்னைக் கூட்டவும் குறைக்கவும், விரிக்கவும் சுருக்கவும் வல்லது. அத்துடன் உயிர்கள் மறுபிறப் பெடுக்கின்றன. அப்பொழுது அவ்வுயிர்கள் தாம் பிறப்பெடுக்கும் உடலுக்கேற்பத் தம் வடிவத்தை மாற்றிக் கொள்கின்றன. இம்முக்கிய விடயம் திருக்குறளில் கூறுப்படவில்லை. அத்துடன் உயிரின் இருப்பிடமும் வடிவமும் திருக்குறளில் கூறப்பட வில்லை. அத்துடன் யானையின் உயிர் பெரிதாக இருந்தால் அவ்வுயிரை நாம் கண்டு கொள்ள முடியும்.

உயிர்களைப் பற்றி வள்ளுவர் பல குறள்களில் கூறுகிறார். 13இ 15இ 30இ 31இ 73இ 77இ 80இ 131இ 143இ 214இ 231இ 244இ 251இ 253இ 254இ 255இ 256இ 257இ 258இ 259இ 260இ 261இ 268இ 315இ 318இ 321இ 322இ 323இ 324இ 326இ 327இ 330இ 334இ 338இ 340இ 361இ 408இ 495இ 501இ 542இ 851இ 885இ 895இ 896இ 940இ 968இ 969இ 970இ 972இ 984இ 1001இ 1012இ 1013இ 1032இ 1062இ 1070இ 1084இ 1106இ 1122இ 1124இ 1132இ 1141இ 1151இ 1160இ 1163இ 1198இ 1206இ 1212இ 1213இ 1230இ 1263இ 1309

வள்ளுவர் 72 குறள்களில் உயிர் என்ற பதத்தைப் பாவிக்கிறார்.

338. குடம்பை தனித்துஒழியப் புள்பறந் தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு.

உடம்போடு உயிருக்குள்ள உறவானது, கூட்டோடு பறவைக்குள்ள உறவை ஒத்தது.

339. உறங்கு வதுபோலும் சாக்காடு; உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

இறப்பு எனப்படுவது ஒருவன் உறங்குவதைப் போன்றது; இறப்பு எனப்படுவது உறக்கம் நீங்கி விழித்துக் கொள்வதைப் போன்றது.

உயிர்கூடிக் குறைந்து விரிந்து சுருக்கிக் காணப்படவில்லை. புழுவுக்கும் மனிதனுக்கும் உள்ள உயிர் பற்றியும் யானைக்கும் சிறுத்தைக்கும் உள்ள உயிர்பற்றியும் அவர் கூறிய போதும் உயிரில் வேறுபாடுகளைக் காண முடியில்லை.

77. என்பு இலதனை வெயில்போலக் காயுமே
அன்பு இலதனை அறம்.

எலும்பில்லாத உடம்போடு வாழும் புழுவை வெயில் காய்ந்து வருத்துவது போல, அன்பில்லாத உயிரை அறம் வருத்தும்.

340. புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு?.

“உடம்பில் ஒரு மூலையில் குடியிருக்கும் உயிர்க்கு நிலையாகப் புகுந்திருக்கும் வீடு இதுவரை அமைய வில்லையோ....?

599. பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்

யானை பருத்த உடம்பை உடையது; கூர்மையான கொம்புகளை உடையது; ஆயினும் ஊக்கமான புலி தாக்கினால் அதற்கு அஞ்சும்.

இதன் மூலம் சமணர் யானையின் உயிர் பெரியது என்று கூறியமையை வள்ளுவர் ஏற்கவில்லை என்று தெரிகிறது. இயல்பாகவே பெரிய உயிர் சிறிய உயிரை வென்று விடும்.

1070. கரப்பவர்க்கு யாங்குஒளிக்கும் கொல்லோ இரப்பவர்
சொல்லாடப் போஒம் உயிர்.

இரப்பவர் "இல்லை" என்று சொல்கின்ற அளவிலேயே உயிர் போகிறதே; உள்ளதை இல்லை என்று ஒளிப்பவர் களுக்கு உயிர் எங்கு ஒளித்திருக்குமோ....?

1122. உடம்பொடு உயிரிடை என்னமற்று அன்ன
மடந்தையோடு எம்மிடை நட்பு.

இம்மடந்தையோடு எம்மிடையே உள்ள நட்பு முறைகள், உடம்போடு உயிர்க்கு உள்ள தொடர்புக் எத்தன்மையானவையோ அத்தன்மையானவை.

1084இ 1106இ 1122இ 1124இ 1132இ 1141இ 1151இ 1160இ 1198இ 1206இ 1212இ 1213இ 1230இ 1263இ 1309.

இன்பத்துப்பாலில் மேலுள்ள பதினாறு குறள்களில் வள்ளுவர் உயிரைப் பற்றி இவ்வாறு கூறுகிறார்.

பெண்ணின் கண்கள் காண்பவரின் உயிரைக் குடிக்கும். அவளது தோள்களைப் பொருந்து போது உயிர் தளிர்ப்பதால் அவளது தோள்கள் அமிர்தத்தினால் செய்யப்பட்டவை. காதலியுடன் எனக்குள்ள தொடர்பு உடம்போடு உயிருக்கு உள்ள தொடர்பு போன்றது. அவளைக் கூடும் போது உயிருக்கு வாழ்வு தருகிறாள்; பிரியும் போது சாவு தருகிறாள்; காதலியைப் பிரிவதை ஏற்காத உயிரும் உடம்பும் மடலூரத் துணிகின்றன். அவள் மகிழ்வதால் உயிர் வாழ்கிறது. பிரிந்து செல்வதாக இருந்தால் நான் உயிரோடு இருந்தால் சொல். காதலனைப் பிரிந்த பின்பும் உயிரோடு வாழ்பவர் பலர். உயிரைக் காவடித்

தண்டாகக் கொண்டு காமமும் நாணமும் இருபக்கமும் தொங்குகின்றன. தனது காதலனின் இனிமையாள ஓர் இனிய சொல்லைப் பெறாமல் உயிர் வாழும் பெண்களைப் போலப் பாவிகள் உலகில் இல்லை. காதலரை நினைப்பதால் தான் உயிரோடு நான் வாழ்கிறேன். இரவில் கண்கள் தூங்கினால் கனவில் வரும் காதலருக்கு உயிர் போகாத நிலையை விளக்குவேன். நனவில் வராத காதலர் கனவில் வருவதால் தான் உயிர் வாழ்கிறேன். பொருள் தேடச் சென்ற காதலரைப் பிரிந்தும், அவரை மனம் எண்ணுவதால் உயிர் தரித்திருக்கிறது. வெளியூர் சென்ற காதலர் திரும்பிவருவாரென்று தான் என் உயிர் தரித்திருக்கிறது. உயிர் வாழ நீர் நிழலுக் கருகில் இருப்பது இனிமையானது. அது போல அன்புள்ளவரிடம் ஊடல் கொள்வதும் இனிமையானது

வள்ளுவரின் இன்பத்துப்பாலைப் போன்றே ஜெயதேவர் ‘அஷ்டபதி கீதகோவிந்தம்’ என்ற நூலை எழுதினார். கீத கோவிந்தத்திலுள்ள சில பகுதிகளை உதாரணத்திற்காக இங்கே தருகின்றேன். இவை கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்து மதத்தின் ‘சுகமான சிந்தனைகள்’ என்ற நூலில் உள்ளன.

தோழி கண்ணனிடம் சொல்கிறாள்;

‘கேசவா! ராதா எவ்வளவு மெலிந்து விட்டாள் தெரியுமா? அவள் கழுத்தில் தங்க வடம் போட்டிருப்பாளே, அதைத் தாங்கக் கூடச் சக்தி இல்லாமற் போய்விட்டது அவளுக்கு; மயங்கி மயங்கி விழுகிறாள்.

கேசவா! நீ மறைந்து நிற்கிறாய்;

அவள் மயங்கி நிற்கிறாள்!

குன்றத்தைக் குடையாகப் பிடித்தவனே! ஆயர் குலம் காத்தவனே! கோபியரை முத்தமிடும் கோபாலா; கம்சக் கூட்டத்தின் வம்சத்தையே கருவறுத்த கண்ணா! ராதையைக் காத்தருள மாட்டாயா....?

கண்ணனும் ராதையும் கலந்து விளையாடியதையே, காமரஸமாகச் சித்தரிக்கு ஜயதேவர், அதில் ஒரு ஞான ரஸத்தையும் ஊட்டுகிறார்.

அந்தப் புனிதமான உடலுறவை ஜயதேவர் வருணிக்கிறார்.

“கட்டி உடல் தழுவிக் காதல் புரிகையிலே மட்டில்லா இன்ப வெள்ளம் பொங்கிப் பெருக்கெடுக்க, கண்ணை இமை மூடில் காதல் சுகம் பெருகும்” என்று கண் இமை திறந்து அங்கே கலவிச் சுகம் கண்டார்.

ஒருவர் இதழ் ஒருவர் கடித்து உறிஞ்சித் தேன்மாந்தும் பருகுவாய்க் கள்ளின் இணை கூறச் சுவையுண்டோ?

காலமெல்லாம் கண்விழித்துக் கண்கள் சிவக்க, பற்பதிந்து செவ்விதழும் வெளுத்துப் பொலிவிழக்க, நற்கூந்தல் சூடுமலர் சருகாய் வாடிவிட, ஆடை சிர்குலைய, அங்கம் வெளித்தெரிய இரவைக் கலைத்தொரு கதிரோன் வெளிப்போந்தான்.

நம்பி முகம் பார்த்து நாணும் கண்ணிரண்டும் வம்பு செய் காதல் உணர்வை மீட்டி விட, நம்பியுடன் நங்கை நாடிப் புணர்ந்ததனை நாவால் எடுத்துரைக்க நல்ல சொல் கிடைக்கவில்லை.

முடிந்த குழல் அவிழ்ந்து மொய்த்துத் தரை புரள, வடித்து உடல் நீரால் கணைக் கதுப்பொளிர, தடித்த

செவ்வாயும் தனிக்காதல் மணம் பரப்ப, கொங்கை மேல் குதித்து முத்து வடம் குலுங்க, மங்கையவள் மேகலையும் மண்ணில் சிதறி விழ அருகிருப்பார் பாராது அல்குல் அணிமார்பாம் மருளும் பேதை கரம் மறைவாய் காத்தபடி உருகித் தடுமாறும். ராதையைக் கண்டவுடன் ‘வருக’ என கண்ணன் விடு கோரிக்கை கண்டவுடன் தையல், காணிக்கையென்று. உடல் உண்ட சுகம் மீண்டும் உண்ண வருவதற்கு, தண்மாலை துறந்தவளும் தாவி அவன் மேல் விழுந்து கொண்ட சுவைக்கு ஒரு கணக்கும் இல்லையடி!

வள்ளுவனது இன்பத்துப் பாலை ஜயதேவர் அப்படியே ஒப்பிக்கிறார். இந்தநிலை வைதீக சமயங்களுக்கன்றி வேறு எச்சமயத்தினருக்கும் பொருந்தாது.

சமணம், பௌத்தம், வேதம், உபநிடதம், வேதாந்தம் போன்றன உயிருக்குக் கூறும் தன்மைகள் எதையும் வள்ளுவர் கூறவில்லை. உயிரும் உடலும் வேறு, கூட்டை விட்டுப் பறவை செல்வதைப் போல உடலை விட்டு உயிர் சென்றுவிடும். பின் கன்மவினைக் கேற்ப மறுபிறவி எடுக்கும். அன்புதான் உயிர். அன்புதான் இறைவன். இது திருமூலரின் அன்பும் சிவமும் என்ற பாடலை ஒத்தது. அத்துடன் உயிர் உடம்பில் எங்கு தங்கிள்ளது என்று வள்ளுவர் கூறவில்லை. அதை வள்ளுவர் கூறாமையால் இனியாரும் கூறமுடியாது. உயிர்தான் பாவபுண்ணி யங்களைச் செய்வது. ஆனால் உடல்தான் இன்ப துன்பங்களை அனுபவிக்கிறது. என்று வள்ளுவர் கூறுகிறார்.

முடிகின்ற இடத்தில் தான் தோற்றமும், தோன்றுகின்ற இடத்தில் தான் முடிவும் ஏற்படுமென்று சமணர்கள் கூறுகிறார்கள். ஒன்றும் அழியாது. அது இன்னொறாக மாறும்

என்கிறார்கள். பஞ்ச பூதங்களில் தான் யாவும் ஒடுங்கும் என்றும், பஞ்சபூதங்கள் தான் பொருட்களாகுமென்றும் பொருட்கள் பஞ்சபூதங்களால் உருவாகு மென்றும் கூறுவர். இப்பஞ்ச பூதங்கள் மேலும் மேலும் பிரியக் கூடிய அதாவது மேலும் மேலும் பிரியக்கூடிய பொருள்கள். எது ஸ்கந்தமோ அதாவது எது கூட்டுப் பொருளோ அது அழிவுறும். அழிவு என்பது நிலைமாறுதல். ஒன்றில் இருந்துதான் ஒன்று உருவாகுமே தவிர ஒன்றுமில்லாமல் எதுவும் உருவாகமாட்டாது.

அணுக்களில் உலகம் ஒடுங்குகிறது. அணுவில் இருந்துதான் உலகம் உற்பத்தியாகிறது. இவற்றிற்குத் துணையாக காலம், ஆகாசம், தர்மம், அதர்மம் என்றும் நான்கு உள்ளன. அணு, ஆகாசம், காலம், தர்மம், அதர்மம் இவ் ஐந்தையும் சமணர் அசீவன் என்ற சொல்லால் குறிக்கின்றனர்.

இவை எதுவும் திருக்குறளில் கூறப்படவில்லை. தேவர், சொர்க்கம், நகரம், அமிர்தம், திருமால், இந்திரன் எண் குணத்தான், திருமகள், சீதேவி, அந்தணர், வேள்வி, அக்கினி, ஆத்மா போன்ற வைதீகச் சமய சொற்களையே வள்ளுவன் குறள் முழுவதும் பாவித்துள்ளான்.

வீடுபேறு பெற்றமை பெறாதமையை ஒட்டி நித்திய சித்தன் அல்லது அநாதி சித்தன், முந்தன் பெத்தன் எனச் சீவன் மூவகை என்பர் சமணர், வள்ளுவன் இவற்றை நீத்தார் பெருமை எனும் அதிகாரத்தில் சிறப்பாகக் கூறுகிறான்.

வீடுபேறு அடைய வேண்டுமானால் பழைய கன்மத்தை அழிக்க வேண்டும் புதுக்கன்மம் ஏற்படாது கவனித்துக் கொள்ள வேண்டும். இதைச் சரியான கொள்கை; சரியான ஞாணம், சரியான சீலம் மூலம் அடையலாம். பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யக்கூடாதது மட்டுமல்ல, பிற உயிர்களுக்கு அகிதம்

செய்யாமையோடு நின்றுவிடாது இதமும் செய்வதே அகிம்சை. இதைச் சமணர் கைக்கொள்ளும் போது தம்முயிருக்குத் தீங்கு செய்யும் எல்லைவரை செல்வர். தற்கொலையைக் கூடச் சமணர் குற்றமாகக் கருதார். ஆனால் வள்ளுவர் இதை ஒப்புக் கொள்ளவில்லை.

43. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான்என்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை.

தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தவர், தான் என்ற ஐவகை வினையும் காக்க வேண்டியது இல் வாழ்வானின் கடனாகும். இப்படிச்சொல்லும் வள்ளுவர் தனக்குத் தீங்கு செய்யும் சமணரை எப்படி ஆதரிப்பார்.

76. அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்;
மறத்திற்கும் அஃதே துணை.

அசீவன் தொடர்பை முற்றாக அறுத்து வீடு பேறடைந்ததால் அறிவுவுமயமாகி, எல்லையில்லா அறிவு (ஆனந்த ஞானம்) எல்லையில்லாக் காட்சி (அனந்த தரிசனம்) எல்லையில்லாச் சக்தி (அனந்த வீரியம்) எல்லையில்லாச் சுகம் (அனந்த சுகம்) அடையும் என்பர் சமணர்.

வைதீக சமயங்கள் உயிர் முத்தியடைய கடவுள் உதவுவதாகக் கூறுகின்றன. கடவுளை நம்பாத சமணம், கடவுளெனக் கருதும் நித்திய சித்தனும் முந்தனும் பெத்தனாகிய சீவனுக்கு உதவி புரிவதில்லை என்று கூறுகிறது. கடவுள் இல்லாவிட்டால் கடவுளை எப்படி அடைவது?

இப்படியான தத்துவங்கள் எவையும் திருக்குறளில் கூறப்படவில்லை.

3. மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

மலர்களின் மீது வாழும் (அன்பரின் அகமாகிய மலரில் வீற்றிருக்கும் என்று உரை கொள்வாரும் உளர்) கடவுளின் திருவடிகளை இடைவிடாமல் நினைக்கின்றவர் இன்ப உலகில் நிலைத்து வாழ்வர். இங்கு கடவுள் உள்ளார் என்றும் அவர் வாழும் இடம் இது வென்றும் வள்ளுவரால் கூறப்பட்டுள்ளது.

அதே போலக் கடவுள் வாழ்த்தில் கூறப்பட்ட பத்துக் குறள்களும் கடவுளின் இலக்கணத்தைக் கூறுகின்றன.

உலகம் படைக்கப்பட்டது என்பதை சமணர் ஏற்பதில்லை. உலகைக் கடவுள் படைத்திருந்தால் கடவுளைப் படைக்க இன்னொரு கடவுள் இருக்க வேண்டும் என்ற கொள்கை யுடையவர்கள் சமணர். சைவ சித்தாந்திகள் பானையையும் குயவனையும் கொண்டு உலகம் படைக்கப்பட்டதாகக் கூறுவதையும் அவர்கள் ஏற்பதில்லை. பானையைக் குயவன் பொருட்களின்றிப் படைத்திருக்க முடியாது. அப்பொருளைப் படைத்தவன் யார்? என்ற வினாவுக்கு எப்படிப் பதில் கூற முடியும். இதனால் பிரச்சினைக்குரிய உலகப் படைப்புப் பற்றித் திருவள்ளுவர் எதுவும் கூறவில்லை.

பௌத்த மதத்தை எடுத்துக் கொண்டால் புத்தர் எதனையும் எழுதி வைக்கவில்லை. அவர் உபதேசிக்கும் போது சீடர்கள் எழுதவும் இல்லை.

“இறந்த காலத்தெண்ணில் புத்தர்களும் சிறந்தருள் கூர்ந்து திருவாய் மொழிந்தது” என்கிறது மணிமேகலை. பல புத்தர்கள் வாழ்ந்ததாக மணிமேகலை குறிப்பிடுகிறது. கௌதம புத்தரின் மூலதனம், ‘முன்னோரின் ஞானம்’ எனப் பலர் வலியுறுத்தியுள்ளனர். புத்தர் ஆரம்பத்தில் இந்துவாக இருந்தமையால் வேத உபநிடதக் கருத்துக்களை அவர்

அறிந்திருந்தார். அவற்றில் தாம் விரும்பியவற்றை உபதேசித்துள்ளார். அத்துடன் சிலவற்றைக் கண்டித்தும் உள்ளார். இதனால் பல வாதப் பிரதி வாதங்கள் நடைபெற்றதாக நாயன்மாரது வாழ்க்கை வரலாறு கூறுகிறது.

பௌத்தத்துடன் வேதாந்தத்தை ஒப்பிடுவதும், புத்தர் மகா விஷ்ணுவின் அவதாரம் என்றும், இந்துமதத்திற்கும் பௌத்தத்திற்கும் வேற்றுமைகள் மிகக் குறைவென்றும் சிலர் கூற முற்பட்ட போதும் இந்துமதம் பௌத்தத்தை ஏற்கவில்லை. அதைச் சிவப்பிரகாசம் என்ற நூலும் பெரிய புராணமும் உறுதிபடுத்துகின்றன. பௌத்தம் காண்டல், கருதல் ஆகிய இரண்மைடயும் பிரமாணமாகக் கொள்கிறது. உரையாகிய ஆப்த வாக்கியத்தை (வேதத்தை) ஏற்பதில்லை. காண்டல், கருதலை வைதீக சமயங்கள் ஏற்றுக் கொண்ட போதும் அவை வேத உபநிடதங்களையே பிரமாண நூல்களாக ஏற்கின்றன. இவற்றை வள்ளுவரும் ஏற்கிறார். ஆய்த வாக்கிய மில்லாவிட்டால் கடவுளின் இருப்பை ஏற்க முடியாது.

ஆய்த்த வாக்கியத்தை வள்ளுவர் ஏற்பதோடு பின்வரும் குறள்களலும் அதைப் பற்றிக் கூறுகிறார். 21இ 28இ 29இ 134இ 249இ 373இ 401இ 410இ 423இ 441இ 543இ 632இ 636.

பற்றற்றவர்களின் பெருமையைச் சிறப்பித்துக் கூறுவது நூல்களின் துணிவாகும். நிறைமொழி மாந்தரின் மணி மொழிகள் அழியாது அவர்களின் பெருமையைக் காட்டி நிற்கும். (நிறைமொழி - வேத உபநிடதங்கள்)

29. குணமென்னும் குன்றுஏறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது.

இக்குறள் வேத உபநிடத புராண இதிகாசக் கருத்தை வலியுறுத்துகிறது.

34. மனத்துக்கண் மாசிலன் ஆதல்; அனைத்துஅறன்;

ஆகுல நீர பிற.

பிராமணன் கற்ற மறை பொருளை மறந்தாலும் மீண்டும் அதனை ஓதிக் கற்கலாம்.

ஒருவன் நுட்பமான நூல்கள் பலவற்றையும் கற்றாலும் ஊழின்படி அவனுக்கு உள்ள அறிவே மேம்பட்டுத் தோன்றும். அறிவு விளங்குவதற்குக் காரணமான நூல்களைக் கற்காதோர் மிருகங்கள்.

கடவுள் தான் பழவினையை உயிருடன் சேர்த்துப் புதிய உடலைப் படைக்கிறார் என்கிறது சைவசித்தாந்தம். பௌத்தம் ஆன்மா பழவினையைத் தானே தேடிச் சென்றடையவும் என்று கூறிப் பின்வரும் உதாரணத்தைக் கூறுகிறது. ‘‘பசுக்கூட்டத்தின் மத்தியில் கன்று தனது தாயைக் கண்டு பிடிப்பதைப் போல ஆன்மாக்கள் தமது கன்ம வினையைத் தாமாகவே கண்டு சேரும்’’ என்பது ஏற்றுக் கொள்ள முடியாதது. அத்துடன் பௌத்தர்களுக்கு கடவுள் இல்லை. அதனால் வள்ளுவர் முதலாம் அதிகாரத்தில் கடவுள் உண்டென்றும் அவரின் திருவடியைச் வணங்கியவர் பல விதமான இன்பங்களைப் பெறுவார்கள் என்று கூறுகிறார்.

3. மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்

நிலமிசை நீடுவாழ் வார்.

84இ 167இ 179இ 617இ 920இ 924இ 936இ

ஆகிய குறள்களில் இந்துத் தெய்வமான திருமகள் பக்தனைத் தேடிச் சென்று உதவுவதாத் திருவள்ளுவர் கூறுகிறார்.

84. அகன்அமர்ந்து செய்யாள் உறையும் முகன்அமர்ந்து

நல்விருந்து ஓம்புவான் இல்.

விருந்தினரை வரவேற்பவனின் வீட்டில் திருமகள் மகிழ்வுடன் தங்கியிருப்பாள்.

179. அறன்அறிந்து வெ∴கா அறிவுடையார்ச் சேரும்

திறன்அறிந்து ஆங்கே திரு.

அறநெறிப்படி வாழ்பவர்களைத் திருமகள் தானே தேடிச் சென்று அவர்களுடன் வாழ்வாள். (திருமகள் செல்வத்திற்குரிய தெய்வம்)

வேதத்தில் 33 தெய்வங்கள் இருக்கின்றன. அவை விண்ணுக்குரியன, மண்ணுக்குரியன, இடைவெளிக்குரியன வென்று பிரிக்கப்பட்டுள்ளன. இப்பிரிவு வகை வேதத்தில் உள்ளது போலத் திருக்குறளில் இல்லாவிட்டாலும் விண்ணுக்குரிய தெய்வங்களாக இந்திரன், திருமால், தேவர்கள் பலகுறள்களில் கூறப்பட்டிருக்கிறார்கள். வேதத்தில் சிவனுக்கு முக்கிய இடம் கொடுக்கப்படவில்லை. வேதத்தில் சிவனுக்குக் கூறப்பட்ட அம்சங்கள் திருக்குறளில் முழுமை பெற்றுள்ளன. அதிலிருந்து வள்ளுவர் ஒரு தெய்வம் உண்டென்றும் அது சிவன் என்றும் கூறுகிறார். தொல்காப்பியம் புறநானூறு போன்ற இலக்கியயங்களில் சிவனுக்குக் கூறப்பட்ட அம்சங்கள் யாவும் திருக்குறளிலும் உள்ளன. அதை விடப் புராண இதிகாசங்களில் சிவனுக்குக் கூறப்பட்ட இலக்கணங்கள் திருக்குறளிலும் கூறப்பட்டுள்ளன. அத்துடன் வேதகால மனிதன் யாகம் செய்த அவியுணவைக் கொடுக்க யார் வல்லமை உள்ள கடவுள் எனத் தெரியாது தடுமாறியதாக வேதத்தில் குறிப்பு உண்டு. ஆனால் திருக்குறளில் ஒரு தெய்வம் என்றும் அது சிவம் என்றும் கூறப்படுகிறது. வள்ளுவர் ஐந்து புலன்களினாலும் வரும்

ஆசைகளை அடக்கியவனுடைய ஆற்றலுக்கு இந்திரனைச் சாட்சியாக்குகிறாரே தவிர இந்திரனைத் தெய்மாக்கவில்லை.

வேதங்கள் வருணனை முக்கிய தெய்வமாக்கிப் போற்றுகின்றன. வள்ளுவர் வேதங்களில் மழைத் தெய்வமான வருணனைச் சிறப்பித்துக் கூறுகிறாரே தவிரத்தெய்வமாக்கவில்லை.

உலகில் நிகழும் ஒவ்வொரு சம்பவத்திற்கும் ஒவ்வொரு தெய்வத்தை வேதம் உருவகித்துள்ளது. மின்னலுக்கும் இடிக்கும் இந்திரன் காரணமென்றும், ஒழுக்கத்திற்கு வர்ணன் தெய்வமென்றும் கூறுகிறது. இப்படித் திருவள்ளுவர் கூறாவிட்டாலும் அறம் செய்பவன் வீட்டில் திருமகள் (செல்வத்திற்குரிய தெய்வம் என்று வைதீக சமயங்கள் கூறும்) வாழ்வாள் என்று கூறுகிறார். அதைவிட தேவருலக இன்பம் நரகம் என்பவை பற்றியும் கூறியுள்ளார்.

269. கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு.

தவஞ் செய்வதால் பெறத்தக்க ஆற்றலைப் பெற்றவர்களுக்கு யமனை வெல்லுதல் கைகூடும் (பரிமேழகர் உரை) யமன் புராணத்தில் தெய்வம்.

388. முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறை என்று வைக்கப்படும்.

நீதி முறை தவறாது ஆளும் அரசன் மக்களால் இறைவனாக மதிக்கப்படுவான்.

புத்தர் கூறும் கன்மம் உபநிடதக் கருத்து என்று பல அறிஞர் கூறியுள்ளனர். கன்மத்தால் மறுபிறப்பு உண்டாவதைத் திருவள்ளுவர் 20இற்கும் மேற்பட்ட குறள்களில் கூறியுள்ளார். மறுபிறப்பு உண்டாகாமல் செய்வதற்கு வழியும் கூறியுள்ளார்.

38. வீழ்நாள் படாஅமை நன்றுஆற்றின் அ.்.தொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல்.

ஒருவன் நாள்தவறாது அறத்தைச் செய்வானானால் அதுவே அவன் உடலோடு வாழும் நாள் வரும் பிறவி வழியை அடைக்கும் கல்லாகும்.

85. வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்துஓம்பி
மிச்சில் மிசைவான் புலம்.

விருந்தினரைப் போற்றி உணவளித்து எஞ்சிய உணவை உண்டு வாழ்கின்றவனுடைய மறுமையான புலத்திற்கு வித்திட வேண்டியதில்லை.

புறத்தே பொருட்கள் இருக்கின்றன, அகத்தே ஆன்மா இருக்கிறது என்கிறது வைதீக சமயங்கள். இதை வள்ளுவரும் ஒப்புக் கொள்கிறார். புறத்தே பொருட்கள் இல்லை, அகத்தே ஆன்மாவும் இல்லை என்கிறது பௌத்தம். தெய்வம் உண்டென்றும் அதை நல்லொழுக்க மூலமும், தான தர்மம் செய்வதன் மூலமும் அடைந்து துன்பமில்லாத நல்வாழ்வு வாழலாம் என்று வள்ளுவர் கூறுகிறார். இது கிரியைகளை விலக்கிய வேத உபநிடதக் கருத்து. பகவத்கீதையின் கருத்து;.

79. புறத்துறுப்பு எல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பி லவர்க்கு?

உடம்பின் அகத்துறுப்பாகிய மனதில் அன்பில்லாதவர்களுக்கு உடம்பின் புறத்து உறுப்புக்கள் எல்லாம் என்ன பயன் செய்யும்?

120. வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின்.

பிறர் பொருளையும் தம்பொருள் போல் போற்றிச் செய்தால், அதுவே வாணிகம் செய்வோர்க்கு உரிய நல்ல வாணிக முறையாகும்.

அகத்தே ஆத்மா உள்ளதென்றும் புறத்தே பொருட்கள் உள்ளனவென்றும் பல குறள்களில் வள்ளுவன் கூறியுள்ளான். உதாரணமாகக் கள்ளாமை, சூது போன்ற அத்தியாயங்கள் புறத்தே பொருளுள்ளமையைக் குறிக்கும்.

அடுத்து வேதம் கூறும் வர்ணப்பாகுபாடும் திருக்குறளில் அடங்கியுள்ளது. வேதம் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் ஆகிய நான்கு வர்ணங்களைப் பற்றிக் கூறுகிறது. திருக்குறளில் பிராமணரது ஒழுக்கம் 30ஆம்இ 134 ஆம் குறள்களிலும் வைசிகரது ஒழுக்கம் 120 குறளிலும் சத்திரியாண் ஒழுக்கம் இறைமாட்சி, செங்கோண்மை, கொடுங்கோண்மை, ஒற்றாடல், அமைச்சுக் குறிப்புஅறிதல் போன்ற அதிகாரங்களிலும் கூறப்படுகிறது. சூத்திரரது ஒழுக்கம் குடிமை என்ற அதிகாரத்திலும் கூறப்பட்டுள்ளது. உயிர்க்கொலை செய்பவர் புலையர் என்றும் குறிப்பிடுகிறார். ஒவ்வொரு தனிமனித ஒழுக்கமும் திருக்குறளில் பேசப்படுகிறது.

அடுத்து புராண இதிகாச வரலாறும், புராண இதிகாச நாயகரது நல்ல தீய குணங்களும் கூறப்படுகிறது. இராமன் திருக்குறள் கூறிய நன்நெறியில் வாழ்ந்தான். இல்வாழ்க்கை வாழ்க்கைத் துணை நலம் போன்ற அதிகாரங்கள் இராமாயணப் பெண் பாத்திரங்களைக் குறிக்கும். மக்கட்பேறு இராமனையும் சகோதரர்களையும் குறிக்கும். நட்பு, வினைத்திட்பம், வினை செயல்வகை, தூது, நாடு, அரண், படை மாட்சி, படைச் செருக்கு, பழைமை, தீநட்பு, கூடாநட்பு, பேதைமை, போன்ற அத்தியாயங்கள் அனுமன், விபூசனன் ஆகியோரைப் பற்றியும்

அரசரது கடமை என்பவற்றைக் குறிக்கும். பிறன் இல்விழையாமை என்ற அதிகாரம் இராவணனது வீழ்ச்சியைக் குறிக்கிறது. மகாபாரதம் திருக்குறளின் குறள் முழுவதையும் கருப்பொருளாகக் கொண்டது. சூது என்ற அத்தியாயம் பாரதக் கதையில் பிரதானமானது.

சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையும் எடுத்தால் பெண்களால் வரும் துன்பம் பற்றித்தான் கூறுப்படுகிறது. சிற்றுயிர்களைக் கூடக் கொல்ல விரும்பாத வள்ளுவர், கோவலன் இறந்தமையால் சினமுற்ற கண்ணகி மதுரையை அழித்ததை ஒப்புக் கொள்வாரா? பாவம் செய்தவன் பொற்கொல்வதும் மன்னனதும் அதற்காகக எத்தனை உயிர்கள் அழிக்கப்பட்டன? குற்றஞ் செய்தவர்களைத் தண்டிப்பது அரசனது கடன்; அவர்களுக்கு மரண தண்டனை விதிப்பது அரசனது கடமை. இது பயிருக்குள் உள்ள களையைப் பிடுங்குவது போன்றது என்று திருவள்ளுவர் கூறுகிறாரே தவிர உயிர்க்கொலையை அவர் ஆதரிக்கவில்லை. அத்துடன் அறமென்றால் இல்லறம் என்கிறார். அத்துடன் பிரமச்சாரியம், களஸ்திரம், வனப்பிஸ்தம், சந்நியாசம் ஆகிய ஆச்சிரம தர்மத்தையும் வள்ளுவர் ஏற்கிறார்.

திருவள்ளுவர் கி. மு. 75 முதல் 36 வரை வாழ்ந்தவர். ஆனபடியால், இவர் பிறப்பதற்கு இருபத்தைந்து ஆண்டுகள் முன்னர் அஃதாவது கி.மு 100 இல் திருமூலர் தமிழ் மூவாயிரம் என்னும் நூலை இயற்றி தம்முடைய ஏழு சீடர்களுக்கும் உபதேசித்துவிட்டுப் பரமுத்தியடைந்ததை அறிந்தவர். ஆனபடியால், தமிழ் மூவாயிரத்தை நன்கு கற்றவர்.

தமிழ் மூவாயிரத்திலிருந்து திருவள்ளுவர் 300 க்கு மேற்பட்ட பாடல்களை எடுத்துத் திருக்குறளுள்ப் புகுத்தியுள்ளார். அவற்றுள் சிலவற்றை இங்கு தருகிறேன்.

1. “ஆருமறியார் அகாரம் அவனென்று” - தமிழ் மூவாயிரம்.

“அகரம் முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன்”- திருக்குறள்

2. “அறிவுடையையார் நெஞ்சொடு ஆதிபகவனும்”

- தமிழ் மூவாயிரம்.

“ஆதிபகவன் முதற்றே யுலகு”- திருக்குறள்

3. “எண்சக்தி தூய்மையும்”- தமிழ் மூவாயிரம்.

“எண்குணத்தான்” - திருக்குறள்.

4. “தன்னையொப்பார் ஒன்றுமில்லாத் தலைமகன்” - தமிழ் மூவாயிரம்.

“தனக்கு உவமை யில்லாதவன்” - திருக்குறள்.

5. “அறவாழி அந்தணன் ஆதிபராபரன்” - தமிழ் மூவாயிரம்.

“அறவாழி அந்தணன் தாழ்” - திருக்குறள்.

வேதங்கள் உபநிடதங்கள் ஆகமங்கள் கூறிய கிரிகைகளை வள்ளுவர் திருக்குறளில் எழுதவில்லையே தவிர அவற்றை எதிர்த்ததாகவோ கண்டித்ததாகவோ எந்தத் தகவல்களும் கூறவில்லை. வேத உபநிடதங்களையும் ஆகமங்களையும் எழுதியவர்களுக்குக் கூட ஆன்மா உலகம் இறைவன் என்பதைப் பற்றிச் சரியான விளக்கமில்லை. சரியான விளக்கமிருந்திருப்பின் அவற்றை வரையறை செய்திருப்பார்கள். பின் அதைப் பற்றி கருத்துச் சொன்னோரும் தாம் விளங்கிக் கொள்ளாமலும், மற்றவர்கள் விளங்கிக் கொள்ள முடியாதவாறும் கருத்துச் சொன்னார்கள். கி.மு 5000

வருடங்களுக்கு முன்வேதங்கள் தோன்றியதாகக் கூறுவர். அதன் பின் பிறந்த வள்ளுவர் புரியாதவற்றிற்கு மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவிக்காது கடவுள், ஆன்மா, உலகம் என்பவை நிலையானவையா? நிலையற்றவையா? ஒன்றா? பலவா? உண்டா? இல்லையா? என்பவற்றை விடுத்துக் கடவுள் உள்ளார் என்றும், ஆன்மா உள்ளது என்றும், ஆன்மா கடவுளின் அருளைப் பெற்று இன்பமாக வாழ வேண்டுமென்றும் நினைத்து அவ்வின்பத்திற்கான வழிவகைகளைக் கூறினார். அது முக்காலத்திற்கும் பொருந்தும். முழு மனிதர்களுக்கும் பொருந்தும். திருவள்ளுவர் தமிழர். அவர் சிவனை முழுமுதற் கடவுளாக ஏற்றுக் கொண்டவர். உலகில் 1330 குறள்களுக்கும் மனித பாத்திர உருவம் யாரும் கொடுக்கவில்லை. ஐந்து வருடங்களாகத் திருக்குறளையும் பல்வேறு நூல்களையும் ஆராய்ந்த பின் இந்த முடிவுக்கு வந்தேன்.

திருக்குறளைப் பற்றிப் பல்வேறு புலவர்கள் எழுதிய பாடல்கள் சில,

திருத்தகு தெய்வத் திருவள் ளுவரோடு
உருத்தகு நற்பலகை ஒக்க - இருக்க
உருத்திர சன்மர் என உரைத்தது வானில்
ஒருக்கஓ என்றதுஓர் சொல்.
அசரீரி

நாடா முதல்நாள் மறைநான் முகன் நாவில்
பாடா இடைப்பா ரதம்பகர்ந்தேன் - கூடாரை
எள்ளிய வென்றி இலங்கிலைவேல் மாற! பின்

வள்ளுவன் வாயதுஎன் வாக்கு.

நாமகள்

நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்

தான்மறைந்து வள்ளுவனாய்த் தந்து உரைத்த - நூன்முறையை

வந்திக்க சென்னி; வாய்வாழ்த்துக; நல்நெஞ்சம்

சிந்திக்க; கேட்க செவி

உக்கிரப்பெருவழுதியார்

மாலும் குறளாய் வளர்ந்து இரண்டு மாண் அடியால்

ஞாலம் முழுவதும் நயந்து அளந்தான் - வால் அறிவின்

வள்ளுவருந் தங்குறள்வெண் பாஅடியால் வையத்தார்

உள்ளுவஎல் லாம்அளந்தார் ஓர்ந்து.

பரணர்

ஒன்றே பொருள்எனின் வேறுஎன்ப; வேறுஎனின்,

ஒன்று என்ப ஆறுசமயத்தார்; நன்றுஎன

எப்பாலவரும் இயைபவே வள்ளுவனார்

முப்பால் மொழிந்த மொழி.

கல்லாடர்.

மும்மனலயும் முந்நாடும் முந்நதியும் முப்பதியும்

மும்முரசும் முத்தமிழும் முக்கொடியும் - மும்மாவும்

தாமுடைய மன்னர் தடமுடிமேல் தார் அன்றோ?

பாமுறைதேர் வள்ளுவர் முப்பால்
சீத்தலைச் சாத்தனார்

பரந்த பொருள் எல்லாம் பார் அறிய வேறு
தெரிந்து தினந்தோறும் சேரச் சுருங்கிய
சொல்லால் விரித்துப் பொருள்விளங்கச் சொல்லுதல்
வல்லார்ஆர் வள்ளுவர்அல் லால்
அரிசில் கீழார்

சாற்றிய பல்கலையும் தப்பா அருமறையும்
போற்றி உரைத்த பொருள் எல்லாம் - தோற்றவே
முப்பால் மொழிந்த முதற்பா வலர் ஒப்பார்
எப்பா வலரினும் இல்.
ஆசிரியர் நல்லத்துவனார்

செய்யா மொழிக்கும திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருள் ஒன்றே; - செய்யா
அதற்கு உரியர் அந்தணரே, ஆராயின் ஏனை
இதற்குஉரியர் அல்லா தார்இல்.
வெள்ளி வீதியார்

ஓதற்கு எளிதாய் உணர்தற்கு அரிதாகி
வேதப்பொருளாய் மிகவிளங்கித் - தீதுஅற்றோர்
உள்ளுதொறு உள்ளுதொறு உள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு
மாங்குடி மருதனார்

எப்பொருளும் யாரும் இயல்பின் அறிவுறச்
செப்பிய வள்ளவர் தாம் செப்பவரும் - முப்பாற்குப்
பாரதஞ்சீ ராம கதைமனுப் பண்டைமறை
நேர்வனமற்று இல்லை நிகர். பாரதம்
பாடிய பெருந்தேவனார்

ஏதம்இல் வள்ளுவர் இன்குறள்வெண் பாவினால்
ஓதிய ஒண்பொருள் எல்லாம் - உரைத்ததனால்
தாது அவிழ் தார்மாற! தாமே தமைப்பயந்த
வேதமே மேதக் கன
பெருஞ்சித்தனார்

அறம்முதல் நான்கும் அகலிடத்தோர் எல்லாம்
திறமுறத் தேர்ந்து தெளியக் - குறள்வெண்பாப்
பன்னிய வள்ளுவனார் பால்முறை நேர் ஒவ்வாத
முன்னை முதுவோர் மொழி. -
கோவூக்கிழார்

வேதப் பொருளை விரகால் விரித்து உலகோர்
ஓதத் தமிழால் உரைசெய்தார்; - ஆதலால்,
உள்ளுநர் உள்ளும் பொருளெல்லாம் உண்டுஎன்ப
வள்ளுவர் வாய்மொழி மாட்டு செயலூர்க்
கொடுஞ் செங்கண்ணா

என்றும் புலராது யாணர்நாட் செல்லுகினும்
நின்று அலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மையதாய்க் -
குன்றாத
செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத் திருமலர் போன்ம்

மன்புலவன் வள்ளுவன் வாய்ச் சொல் -
இறையனார்

தினையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால் - மனை அளகு
வள்ளைக்கு உறங்கும் வளநாட! வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா விரி -
கபிலர்

தானே முழுதுஉணர்ந்து தண்ட தமிழின் வெண்குறளால்
ஆனா அறம்முதலா அந்நான் கும் - ஏனோர்க்கு
ஊழின் உரைத்தார்க்கும் ஒண்ணீர் முகிலுக்கு
வாழிஉலகு என் ஆற்றும் மற்று. -
நக்கீரர்

அறம் பொருள் இன்பம் வீடு என்னும் அந்நான்கின்
திறம் தெரிந்து செப்பிய தேவை - மறத்தேயும்
வள்ளுவன் என்பான்ஓர் பேதை; அவன் வாய்ச்சொல்
கொள்ளார் அறிவுடைய யார். -
மாமூலனார்

கான்நின்ற தொங்கலாய்! காசிபனார் தந்ததுமுன்
கூநின்று அளந்த குறள் என்ப - நூன்முறையான்
வான்நின்று மண்ணின்று அளந்ததே வள்ளுவனார்
தாம்நின்று அளந்த குறள். -
பொன்முடியார்

ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததன் பின் - போய் ஒருத்தர்
வாய்க்கேட்க நூல் உளவோ? மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம். - நத்தத்தனார்

ஆண்பால்ஏழ்; ஆறிரண்டு பெண்பால்; அடுத்து அன்பு
பூண்பால் இருபால்ஓர் ஆறாக - மாண்பு ஆய
காமத்தின் பக்கம்ஒரு மூன்றாகக் கட்டுரைத்தார்
நாமத்தின் வள்ளுவனார் நன்கு. -
மோசிகீரனார்

எல்லாப் பொருளும் இதன்பால் உள; இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்; - சொல்லால்
பரந்தபா வால் என் பயன்? வள்ளவனார்
சுரந்தபா வையத் துணை. -
மதுரைத் தமிழ் நாகனார்

மணற்கிளைக்க நீர்ஊறும்; மைந்தர்கள் வாய்வைத்து
உணச்சுரக்கும் தாய்முலை; ஒண்பால் - பிணக்கு இலா
வாய்மொழி வள்ளுவர் முப்பால் மதிப்புலவோர்க்கு
ஆய்தொ றும் ஊறும் அறிவு -
உத்திரசன்ம கண்ணர்

புலவர் திருவள்ளுவர் அன்றிப் பூமேல்
சிலவர் புலவர் எனச் செப்பல் - நிலவு
பிறங்கு ஒளிமா வைக்கும் பெயர்மாலை; மற்றும்

கறங்கு இருள்மா லைக்கும் பெயர் - மதுரைத் தமிழாசிரியர் செங்குன்றூர்கிழார்

பூவிற்குத் தாமரையே; பொன்னுக்குச் சாம்புநதம்;
ஆவிற்கு அருமுனியா; ஆனைக்கு அமர்உம்பல்
தேவில் திருமால் எனச்சிறந்தது என்பவே
பாவிற்கு வள்ளுவர்வெண் பா. - கவிசாகரப் பெருந்தேவனார்

சிந்தைக்கு இனிய; செவிக்கு இனிய; வாய்க்கு இனிய;
வந்த இருவினைக்கு மாமருந்து; - முந்திய
நன்னெறி நாம்அறிய நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய இன்குறள்வெண் பா - கவுணியனார்

திருக்குறளைப் பற்றிப் பல்வேறு காலப்பகுதியில் வாழ்ந்த புலவர்கள் கூறிய அரிக கவிதைகளை ஆராய்ந்தால் திருக்குறள் வேதசாரம் என்ற உண்மை புலனாகும். திருக்குறளைச் சங்கப் பலகையில் வைத்த போது வானில் எழுந்த அசரீதியும் நாமகள் கூறிய கவிதையும் ஏனைய புலவர்கள் பாடிய கவிதைகளும் இதை நிருபிக்கின்றன.


Distributed By :
LANKA BOOK DEPOT
F.L. 1.14, Dias Place,
Gunasingapura,
Colombo - 12.
Tel : 011-2-341942
PRICE : 120.00